# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 35 • 21.07.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்


## இன்று கன்னியா, நாளை கோணேஸ்வரர் ஆச்சரியப்படுவதற்கு இல்லை



தென்கையிலை ஆதீன குருமுதல்வர் அகத்திய அடிகளார் இலக்கு மின்னிதழுக்கு நெஞ்சுருகி பேட்டி



## எமது தேசிய சூழலை நல்லாட்சி செய்யும் அதிகாரம் எங்களிடமே இருக்க வேண்டும்

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் சிறப்புப் பேட்டி

## பத்து ஆண்டுகளைப் போலவே

### பதினோராவது ஆண்டும் கடந்து செல்லுமா?

வேல்ஸ் இல் இருந்து அருஷ்




## கன்னியா வரலாற்றில் பண்பாட்டில் இன அழிப்பு

தீபச்செல்வன்

## கறுப்பு யூலை இனப்படுகொலை இன்றும் தொடர்கின்றது

ஆர்த்திகன்



## மும்முனைப் போட்டியில் ஐ.தே.க. விட்டுக்கொடுக்க மறுக்கும் ரணில்

பூமிகன்

# சுயலாப அரசியலை கைவிடுவாரா சம்பந்தன்?

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

தமிழ் மக்களின் தலைமகன் என்று மார்பு தட்டும் சம்பந்தனின் கோட்டைக்குள்ளேயே சிங்கள, பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகின்ற நிலையிலாவது அவர் சுயலாப அரசியலை கைவிடுவாரா என்று தமிழ்த் தேசிய அவதானிப்பு மையம் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளது.

இவ்விடயம் குறித்து மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது...

தமிழ் மக்களின் வரலாற்றுப் பொக்கிஷங்கள் நிறைந்த கன்னியா பகுதியை வில்கம் விகாரை வஹாராதிபதி அமபிட்டிய சீல வன்ச திஸ்ஸ ஸ்திர தேரர் திட்டமிட்ட வகையில் ஆக்கிமிப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து நகர்வுகளைச் செய்து வருகின்றார். இவ்வளவு நாளும் அரசல்புரசலாக சென்றுகொண்டிருந்த இந்த விடயம் தொடர்பாக உரிய கவனத்தினை திருமலை மாவட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் சம்பந்தன் செலுத்தியிருந்தால் இப்பிரச்சினை இவ்வளவு தூரம் விஸ்வரூபம் எடுத்திருக்காது.

எதிர்க்கட்சித்தலைவர் பதவியை கையில் வைத்திருந்த தருணத்திலோ அல்லது அரசாங்கத்திற்கு வரவு செலவுத்திட்டங்களிலும், நெருக்கடிகளிலும் அரசை பாதுகாக்கின்றபோதோ தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்குங்கள் என்று நிபந்தனை விதிப்பதற்கு திராணியற்றிருந்தாலும் ஆகக்குறைந்தது தனது சொந்த மாவட்டத்தில் நடைபெறும் இந்த ஆக்கிரமிப்புக்களை உடன் நிறுத்துங்கள் என்றாவது நிபந்தனை விதித்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்திருக்கலாம். ஆனால் சம்பந்தன் அதனைச் செய்திருக்கவில்லை.

கன்னியா பிள்ளையார் ஆலயம் உள்ளிட்ட முக்கிய தமிழர்களின் அடையாளங்களைக் கொண்டிருக்கும் 8 ஏக்கர் நிலத்திற்கு சொந்தக்காரியான கோகில ரமணி அம்மா குறித்த விகாராதிபதியின் திட்டத்தில் அவ்விடத்தினை தொல்பொருள் திணைக்களம் சுவீகரித்துள்ளது என்பது உள்ளிட்ட விடயங்களை எத்தனையோ தடவைகள் சம்பந்தனைச் சந்தித்தும் தொலைபேசியிலும் கூறியபோதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இப்பிரதேசத்தில் சுனாமியின் பின்னர் பிள்ளையார் ஆலயத்தினை அமைப்பதற்கான அடிக்கல்லை சம்பந்தன் நாட்டிய போதும் ஆலயத்திற்கான மேடை மட்டுமே அமைக்கப்பட்டது. அதற்கு அப்பால் நிர்மாணப்பணிகளை முன்னெடுப்பதற்கு சம்பந்தன் உதவியிருக்கவில்லை. தற்போது அவர் அடிக்கல் நாட்டி அமைக்கப்பட்ட மேடையும் அழிக்கப்பட்டுள்ளது.

இப்படியிருக்க, கடந்த 11ஆம் திகதி அரசாங்கத்திற்கு எதிராக வந்த நம்பிக்கையில்லாத பிரேரணையைத் தோற்கடித்து மீண்டும் அரசாங்கத்தினை கூட்டமைப்பு காப்பாற்றிவிட்டு மூச்சுவிடுவதற்குள் கல்லாவில் பெரும்பான்மை இனத்தவரும், தேரர்களும் இணைந்து கைவைத்து விட்டார்கள்.

அதன் பின்னர் கடந்த 16ஆம் திகதி இன, மத, பிரதேச பேதமின்றி மக்கள் ஜனநாயக போராட்டங்களை முன்னெடுத்தபோது ஆகக் குறைந்தது அந்ததொகுதியில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்றாவது சம்பந்தன் சமூகமளிப்பதை விரும்பியிருக்கவில்லை. மேலும் தனது மாவட்ட முகவராக செயற்படுவதற்காகவே தேசியப் பட்டியல் ஆசனத்தில் உள்ளீர்க்கப்பட்ட துரை ரட்ணசிங்கமும் குறித்த பகுதிக்கு சமூகமளித்திருக்கவில்லை.

இதன் பின்னர் நிலைமைகள் மோசமடையவும், சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு முண்டு கொடுக்கும் அரசாங்கத்தின் மற்றொரு பங்காளிக்கட்சி தலைவரும் அமைச்சருமான மனோகணேசன் இந்தவியடம் தொடர்பில்



சனாதிபதியுடன் சந்தித்து பேச்சுவார்த்தையை முன்னெடுத்தபோது கூட சம்பந்தனோ அல்லது வேறு கூட்டமைப்பு உறுப்பினர்களோ பங்கேற்றிருக்கவில்லை.

இவ்வாறான செயற்பாடு, தமிழ் மக்களுக்கு என்ன அநீதிகள் இடம்பெற்றாலும் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கத்தினை நோகாது பாதுகாப்பதே தமது நிலைப்பாடு என்பதை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். சம்பந்தன் உட்பட அனைத்து கூட்டமைப்பு உறுப்பினர்களும் கன்னியா உட்பட எந்தவிடமாக இருந்தாலும் அதனைப்பயன்படுத்தி அடுத்த தேர்தலில் தமது வாக்குவங்கியை நிரப்புவதை மட்டுமே மையப்படுத்தி செயற்படுகின்றார்களே தவிரவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண விரும்பவில்லை.

சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு கொள்கைகளை, கோட்பாடுகளை அணுகு முறைகளை என அனைத்தையுமே கைவிட்டு அரசாங்கத்திடம் சரணாகதி அடைந்துள்ள நிலையில் கன்னியா விடயத்தில் இதய சுத்தியுடன் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்றுள்ளது.

## சாவடைந்த இளைஞரின் சடலத்தை பார்க்க வந்த 4 பேர் கைது!

யாழ்.மானிப்பாய் பகுதியில் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இளைஞனின் சடலத்தைப் பார்வையிட யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த 4 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர். கொடிகாமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காவல்துறையினர் தெரிவித்தனர். கொல்லப்பட்ட இளைஞனின் சடலத்தைப் பார்வையிடுவதற்காக இன்று காலை அவர்கள் நால்வரும் வேறு சிலருடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் நால்வரும் கொல்லப்பட்டவருடன் கைபேசி ஊடாக இறுதியாகத் தொடர்பு வைத்திருந்தனர் என்று காவல்துறையினர் மேலும் தகவல் வெளியிட்டனர்.

## இராணுவ மயப்படுத்தப்பட்டே குடியேற்றங்கள் அரங்கேறி வருகிறது!

### நவனீதன் கருத்து

இராணுவ மயப்படுத்தப்பட்டே குடியேற்றங்கள் அரங்கேறி இருக்கின்றது என தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத் தலைவர் வி.நவனீதன் தெரிவித்தார். வவுனியாவில் இன்று (21.7) நலிவுற்றுப்போன நல்லாட்சியும் தமிழ் மக்களின் எதிர்காலமும் எனும் கருத்தாய்வு நிகழ்வு மன்னார் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,




இன்று நடைபெற்று கொண்டிருக்கின்ற நில அபகரிப்பு முயற்சிகள் தொடர்பாக ஒரு புரிதலை அடைவதற்கு முன்னர் இது இன்று தான் நடைபெறுகின்றதா? அல்லது வரலாற்று காலம் தொட்டு இன்று வரை எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்று இருக்கிறது என்பது அத்தியாவசியமான ஒன்றாகும். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே இந்த நாட்டிலே வடகிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் திட்டமிட்ட முறையிலேயே மிகவும் கட்டமைக்கப்பட்ட முறையிலேயே தமிழர்களுடைய இனப்பரம்பலை மாற்றியமைக்கக் கூடிய வகையிலேயே சிங்களப் பேரினவாதத் தலைவர்களால்

தொடர்ச்சி 11 ஆம் பக்கம் →

## கேப்பாப்புலவு மக்களுடன் ஐ.நா மனித உரிமைக்குழு சந்திப்பு



ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைக்கான செயற்பாட்டுக்குழுவானது, காணி விடுவிப்பைக்கோரி தொடர்போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் கேப்பாப்புலவு மக்களை, இன்று சந்தித்து கலந்துரையாடியுள்ளது. ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக இடம்பெற்ற இக் கலந்துரையாடலில், கேப்பாப்புலவு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை தொடர்பில் குறித்த குழுவினால் கேட்டறியப்பட்டன. கலந்துரையாடல் தொடர்பில் கேப்பாப்புலவு மக்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இன்றைய தினம் எம்மைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

# புலிகள் போல் பாய்வதை தமிழர் நிறுத்த வேண்டும்

## ஞானசாரர் கூச்சல்



“தமிழர்கள் புலிகள் போல் உறுமிக்கொண்டு திரள்வதையும் சிங்கள — பௌத்த மக்களை அச்சுறுத்துவதையும் உடன் நிறுத்த வேண்டும். இது சிங்கள — பௌத்த நாடு என்பதை அவர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும். கன்னியாப் பிரச்சினை தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் சிங்கள — பௌத்த மக்களுக்கே இருக்கின்றது.” — இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். கன்னியாவில் அமைதி வழியில் போராடிய தமிழ் மக்கள் மீது சிங்களவர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:— “பிரச்சினைகளுக்குப் போராட்டம் என்ற பெயரில் அச்சுறுத்தல் விடுவிப்பதோ அல்லது வன்முறைகளில் இரு இனத்தவர்களும் — இரு மதத்தவர்களும் ஈடுபடுவதோ அழகல்ல. இந்த ஆட்சி இனக்கலவரத்துக்கும் மதக்கலவரத்துக்கும் தூபமிட்டுள்ளது. விரைவில் ஆட்சி மாற்றம் இடம்பெறும். பௌத்த தேரர்களின் பங்களிப்புடன் சிங்கள ஆட்சி விரைவில் மலரும். அந்த ஆட்சியில் சிங்கள.. தமிழ். முஸ்லிம் என மூவின இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழும் நிலைமையை நாம் உருவாக்குவோம்” — என்றார்.

# இலங்கை-பிரித்தானிய படைகள் இணைந்து கூட்டுப்பயிற்சி!

இலங்கை பிரித்தானிய படைகள் இணைந்து, ஒப்பரேசன் ஈட்டி (Operation Spear) என்ற பெயரில் கூட்டு இராணுவ ஒத்திகைகளை மேற்கொள்ளவுள்ளன. அதற்கமைய ஒக்டோபர் 27ஆம் திகதி முதல் நவம்பர் 04ஆம் திகதி வரை இந்தக் கூட்டுப் பயிற்சி 9 நாட்கள் நடைபெறவுள்ளன. இந்தக் கூட்டுப் பயிற்சி, பயங்கரவாத தாக்குதலுக்குப் பின்னர் என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளது. ஏதேனும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சம்பவங்கள் நிகழ்ந்தால், தமது நாட்டவர்களை வெளியேற்றுவதை அடிப்படையாகக்கொண்டு பிரித்தானியா இந்த கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கிறது. இலங்கை படையினர் மனிதாபிமான உதவிகள், இடர் மீட்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை கற்றுக்கொள்வதற்கு இந்தப் பயிற்சியை பயன்படுத்திக்கொள்ளவுள்ளனர். இந்தக் கூட்டுப் பயிற்சிக்காக இலங்கையின் விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் மருத்துவமனைகள் பயன்படுத்தப்படவுள்ளன. ஏனைய மோதல் பகுதிகளில் பிரித்தானிய படைகள் பெற்றுக்கொண்ட உளவு மற்றும் காயமுற்றோரை மீட்பது தொடர்பான அனுபவங்களை இதன்போது வெளிப்படுத்தவுள்ளனர்.

# இராணுவ சீருடைக்கு ஒத்ததான சீருடைகளை பயன்படுத்த தடை

இராணுவ சீருடைக்கு ஒத்ததான சீருடைகளை பயன்படுத்த தடை விதிக்கும் வகையிலான சட்ட திருத்தத்தை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சர் என்ற விதத்தில் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கொண்டு வரப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளது. இராணுவ சீருடைக்கு ஒத்ததான சீருடைகளை வைத்திருப்பதானது, தேசிய பாதுகாப்புக்கு சிறந்ததாக அமையாது என்ற அடிப்படையிலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. சீருடை கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் இந்த அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவிக்கின்றது. இராணுவ சீருடைகளை வைத்திருப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றமையினால், காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் இந்த சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இதன்படி, இராணுவ சீருடைக்கு ஒத்ததான ஆடைகளை வைத்திருத்தல், ஆடைகளை அணிதல், விற்பனை செய்தல் உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் தடை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பௌத்த மயமாக்கலும் த.தே.கூட்டமைப்பும்..

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீராவியடி, திருமலை மாவட்டத்தில் கன்னியா என தொடரும் பௌத்த மத ஆக்கிரமிப்புக்கள் தமிழர்களுக்கு என தாயகம் ஒன்று இருக்கக்கூடாது என்பதில் சிங்கள ஆளும் வர்க்கம் உறுதியாக இருப்பதை மீண்டும் உணர்த்தியிருக்கின்றது. இதனைத் தடுப்பதற்கான உபாயங்கள் எதுவும் கையில் இல்லாமல் வெறுமனே அரசின் வாக்குறுதிகளை மட்டும் நம்பி அரசியல் செய்துகொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அனைத்தையும் கோட்டைவிடப்போகின்றது என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான காலத்தில் தமிழ்ப் பகுதிகளை பௌத்த மயமாக்குதல் என்ற இலக்குடன் அரசாங்க இயந்திரங்கள் செயற்படத் தொடங்கியிருக்கின்றது. நாடு முழுவதையும் சிங்கள — பௌத்த மயமாக்கி ஒற்றையாட்சிக்குள் வைத்திருப்பது என்பதுதான் அரசாங்கத்தின் மூலோபாயம். அந்த இலக்கை அடைவதற்கான தந்திரோபாயமாகத்தான் இந்துக் கோவில்கள் இருக்கும் இடங்களில் விகாரைகளை அமைப்பதும், பின்னர் இந்துக் கோவில்களை இடித்துத் தரைமட்டமாக்கும் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இதன் ஒரு பகுதியாகத்தான் முல்லைத்தீவு நீராவியடியில் பாரிய புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டது. அங்குள்ள பழமைவாய்ந்த பிள்ளையார் கோவிலை இடிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இதேபோலத்தான் கன்னியாவிலுள்ள பழமைவாய்ந்த பிள்ளையார் கோவில் இடிக்கப்பட்டு அங்கு விகாரை ஒன்று அமைக்கப்படுகின்றது. இந்த விகாரையை அமைப்பதற்கான அனுமதியை சனாதிபதியே வழங்கியதாக செய்திகள் வெளிவந்திருந்த போதிலும், அவர் அதனை பின்னர் மறுத்திருக்கின்றார்.

இந்த பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளுக்கு தொல்பொருள் திணைக்களமே துணையாக இருக்கின்றது. ஒரு பகுதியை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அவர்கள் அடையாளப்படுத்துவது, அந்தப் பகுதியை பௌத்த மயமாக்குவதற்கே. தொல்பொருள் திணைக்களத்துக்கு உண்மையில் அதற்கான அதிகாரம் இல்லை. தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக ஒரு பகுதி அடையாளம் காணப்படும்போது, அந்தப் பகுதியைப் பேணிப் பாதுகாப்பதற்கும், மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் மட்டுமே திணைக்களத்துக்கு அதிகாரம் உளளது.

ஆனால் அரசாங்க நிர்வாகம் முழுமையாக பௌத்த — சிங்கள மயமாக்கப்பட்டுள்ளதால், உடனடியாகவே அந்த இடங்களில் புத்தர் சிலை, விகாரை, அதற்கான இராணுவப் பாதுகாப்பு காவலரண்கள், சிங்களவர்களின் குடியேற்றம் என கொண்டுவரப்பட்டு — ஒரு சிங்களக் கிராமமே உருவாகிவிடுகின்றது. இதனால், தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக அடையாளம் காணப்படாத பகுதிகளில் கூட, இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அமைச்சர் மனோ கணேசனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பல உண்மைகள் வெளிவந்திருக்கின்றது. நீராவியடி பகுதி தொல்பொருள் முக்கியமான இடமாக அடையாளம் காணப்படவில்லை என்பதை தொல்பொருள் திணைக்களத்தின் தலைவரே ஒப்புக் கொண்டிருக்கின்றார். ஆக, போலியான சில ஆவணங்களைப் பயன்படுத்தி திட்டமிட்ட முறையில் அங்கு ஒரு குழப்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதேவேளையில், தொல்பொருள் திணைக்களத்தின் 32 பணிப்பாளர்களும் சிங்களவர்களே என்ற உண்மையும் இந்தக் கூட்டத்தல் வெளிப்பட்டது.

அரசாங்கத்தைப் பாதுகாப்பதிலேயே தமது முழுக்கவனத்தையும் செலுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சனாதிபதியுடனான இந்த சந்திப்பை புறக்கணித்தது. மனோ கணேசன் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தது இதற்குக் காரணமாக இருக்கலாம். இப்போது சனாதிபதியைத் தனியாகச் சந்திக்கப்போவதாக சம்பந்தன் அறிவித்திருக்கின்றார். சம்பந்தனின் சொந்தத் தொகுதியில் நடைபெறும் பௌத்த — சிங்கள ஆக்கிரமிப்பு குறித்து இந்த நிமிடம் வரையில் சம்பந்தன் வாய் திறக்கவில்லை. கம்பரெலியாவைக் கொடுத்து கூட்டமைப்பினரின் வாய்களை அரசாங்கம் அடைத்துவிட்டது. கல்முனை விடயத்தில் கொடுத்த வாக்குறுதிகளை ரணில் மீறிச் செயற்படுவதை வெளியே சொல்ல முடியாத சங்கடத்தில் கூட்டமைப்பு இருக்கின்றது. கிடைத்த அனைத்து சந்தர்ப்பங்களையும் கூட்டமைப்பு தவறவிட்டே—யிருக்கின்றது. இப்போது தமிழ் எம்.பி.கள் அனைவரும் ஒன்றிணைந்து பலமாகச் செயற்பட்டிருக்கக்கூடிய சந்தர்ப்பத்தையும் அவர்கள் தவறவிட்டுள்ளார்கள். கூட்டமைப்பினரின் இந்த இயலாமையை அரசாங்கம் தெளிவாக அடையாளம் கண்டு கொண்டிருக்கின்றது. இந்த நிலையில், பௌத்த மயமாக்கல் தொடரத்தான் செய்யும்...

ஆசிரியர்

# மறக்க முடியுமா?

# கறுப்பு யூலை

# BLACK JULY

## 1983 இனப்படுகொலை வடிவங்கள் மாறினாலும் இனஅழிப்பு தொடர்கிறது

நீங்காத நினைவில்
உலகத் தமிழர்களுடன்
இலக்கு இணையம்
இலக்கு மின்னிதழ்

# இன்று கன்னியா, நாளை கோணேஸ்வரர் ஆலயம் என்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை

## தென்கையிலை ஆதீன குருமுதல்வர் அகத்திய அடிகளார் நெஞ்சுருகி பேட்டி

கன்னியா பிள்ளையார் ஆலயம் உட்பட திருமலையில் பாரம்பரியங்கள் மீது திட்டமிட்டு தாக்குதல்கள் நடத்தப்படுவதுடன் மத சுதந்திரம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளதாக கன்னியா தென்கையிலை ஆதீன குருமுதல்வர் அகத்திய அடிகளார் தெரிவித்தார். அவர் வழங்கிய முழு செவ்வி வருமாறு...

**கேள்வி: கன்னியாவின் புராதன இந்து அடையாளங்கள் தொடர்ச்சியாக இலக்கு வைக்கப் படுவதன் பின்னணி என்ன?**

பதில்:— கன்னியாவின் வரலாறு நெடியது. சுமார் 1000 வருடங்களாக அங்கு தமிழர்கள் தமது மூதாதையர்களிற்கு பிதிர்க்கடன்களை செய்து வருகிறார்கள் என நம்பப்படுகிறது. ஒல்லாந்தர் கால குறிப்புக்களிலும் அது உள்ளது. இராவணன் தனது தாய்க்கு பிதிர்க்கடன் நிறைவேற்றிய இடமென்ற ஐதீகமும் உள்ளது. இந்த பகுதிக்கு சமீபமாக கி.பி 2ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ராஜராஜ பெரும்பள்ளியென்ற (வெல்கம் விகாரை) தமிழ் பௌத்த பல்கலைகழகமும் அமைந்துள்ளது. இன்று உலகிலேயே எஞ்சியுள்ள ஒரேயொரு தமிழ் பௌத்த பல்கலைகழகம் அதுதான். கி.பி 10ஆம் நூற்றாண்டில் ராஜராஜ சோழன் அதை புனரமைத்து அதற்கு பல கல்வெட்டுக்களை பரிசளித்திருந்தான். இதன் மூலம் அந்த பகுதியில் தமிழ் சைவர்களும், தமிழ் பௌத்தர்களும் பண்டைக்காலத்திலேயே வாழ்ந்திருந்தார்கள் என்பது உறுதியாகிறது. எனினும், வாழ்ந்தவர் அனைவரும் தமிழரே.



இந்நிலையில், திருகோணமலை—யிலிருந்த ஆங்கிலேய அதிகாரியொருவர் திடீரென நோய்வாய்ப்பட்டிருந்தார். பல சிகிச்சை செய்தும் அவர் குணமாகவில்லை. இறுதியாக கன்னியா வெந்நீர் ஊற்றில் நீராடி, அருகிலிருந்த பிள்ளையார் ஆலயத்தில் வழிபட்டு குணமடைந்தார். அப்போது அந்த ஆலயத்தை நிர்வகித்து வந்தவரிடம், வெந்நீர் ஊற்று உள்ளிட்ட 8 ஏக்கர் காணியை ஆங்கிலேய அதிகாரி வழங்கினார். அவர்களின் பரம்பரையே அதை நிர்வகித்து வந்தது. பின்னர், தொல்லியல் பிரதேசமாக அது பிரகடனப்படுத்தப்பட்டு, அரசு அதை பொறுப்பேற்றுள்ளது. எனினும், அதற்கான மாற்று காணி அந்த பெண்மணிக்கு வழங்கப்படவில்லை.

இதேவேளை, சுனாமியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணி நிதியில், கன்னியா பிள்ளையார் ஆலயத்தையும் புனரமைக்க திட்டமிடப்பட்டது. இதற்காக ஆலயம் உடைக்கப்பட்டது. பின்னர் மீள் கட்டுமானப் பணி ஆரம்பிக்கும் சமயத்தில், தனிநபர் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். தொல்லியல் துறையின் பிரதேசத்தில் கட்டுமானம் செய்யமுடியாது என அவர் கோரினார். அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, பிள்ளையார் ஆலய பணிக்கு தடை உத்தரவிட்டது. இதனால் இப்பொழுது அங்கு பிள்ளையார் ஆலயம் இல்லை. ஒரு பீடம் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. அந்தப்பீடம் முதலில் உடைக்கப்பட்டது. அதற்கு எதிராக நாம் போர்க்கொடி தூக்கியிருந்த நிலையில் அது தடுக்கப்பட்டபோதும் பின்னர் சூட்சுமான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

**கேள்வி: கடந்த 16ஆம் திகதி ஒன்றிணைந்த சனநாயகப் போராட்டத்தினை முன்னெடுக்கத் தீர்மானித்தமைக்கான காரணம் என்ன?**

பதில்:— அண்மையில் கன்னியா பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் பௌத்த தாதுகோபுரம் ஒன்று அமைக்கும் முயற்சி வில்கம் விகாரை விஹாராதிபதி அமபிட்டிய சீல வன்ச திஸ்ஸ ஸ்திர தேரரால் முன்னெடுக்கப்பட்டது. இது பற்றிய முறைப்பாடுகள் தொடர்ச்சியாக செய்யப்பட்டதோடு ஜுன் மாதம் 7 ஆம் திகதி நடைபெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பூர்வீக பிள்ளையார் ஆலய இடத்தில் அதை உடைத்து பௌத்த தாது கோபுரம் அமைக்கப்படுவது தடை செய்யப்படவேண்டும் என்று தீர்மானம் மெற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனையடுத்து தேரர் கன்னியாவில் தாது கோபுரம் அமைக்கும் முயற்சியை தமிழ் அரசியல்வாதி ஒருவர் தலையிட்டு தடுத்து வைத்துள்ளார். இது பௌத்த சாசனத்துக்கு எதிரான நடவடிக்கையென சனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாட்டை அடிப்படையாகக்கொண்டு சனாதிபதி காரியாலயம் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர்நாயகம் பேராசிரியர் மண்டாவெலவுக்கு உடனடியாக தாதுகோபுரத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி ஆணையொன்றை பிறப்பித்திருந்தது. கடந்த ஜுன் மாதம் 24 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் சனாதிபதியின் மேலதிக செயலாளரால் திருகோணமலை அரச அதிபர் புஸ்மகுமாரவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனையடுத்து தாது கோபுரத்தை அமைக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை திருமலை அரச அதிபர் செய்திருந்தார். இதனாலேயே நாம் போராடுவதற்கு தீர்மானித்திருந்தோம்.

**கேள்வி: சனநாயக போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போது நடந்தது என்ன?**

பதில்:— கவனயீர்ப்பு போராட்டம் நடத்துவதற்கான முன் அனுமதி காவல்துறை—யினரிடம் பெறப்பட்டிருந்தது. அமைதியான



கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கேற்பதற்காக இன, மதம் கடந்து ஆயிரக்கணக்கானவர்கள் வருகை தந்திருந்தனர். திருவாசகத்தை ஓதிய வண்ணம் ஆலயத்துக்கு செல்ல முயன்றோம். கன்னியா பிரதான வீதியில் பெருந்தொகையான இராணுவம், காவல்துறையினர் குவிக்கப்பட்டு ஆலய வளாகத்துக்குள் வருவதற்கு முன்பே நூற்றுக்கணக்கான காடையர்கள் வெந்நீரூற்று வளாகத்துக்குள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு ஆதரவளித்து பிக்குமார்கள் குழுவும் இருந்தது. நாங்கள் அமைதியான முறையில் ஆலயத்தை தரிசிக்க செல்கிறோமென வழி மறித்து நின்ற காவல்துறையினரிடம் கூறினோம். அவர்கள் ஆலயத்துக்கு செல்வதற்கோ வழிபடுவதற்கோ முடியாது நீதிமன்றத்தினால் தடை யுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதெனக் கூறி தம்மிடமிருந்த தடையுத்தரவு கட்டளையை வாசித்து காட்டினார்கள். அது சிங்களத்திலிருந்த காரணத்தினால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என இளைஞர்கள் அதிருப்தியை தெரிவித்தனர்.

மீண்டும் கன்னியா நீர் கிணற்றுக்கு அருகிலுள்ள பிள்ளையார் ஆலயத்தை வழிபடவும் அவ்வாலயம் இருந்த இடத்தில் சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறதா என்பதை கண்டறியவும் அனுமதி வழங்கும்படி காவல்துறையினரிடம் கோரினோம். நானும் கன்னியா பிள்ளையார் ஆலய தர்ம கர்த்தா கோகிலரமணி அம்மாவும் இரண்டு காவல்துறை—யினரின் உதவியுடன் பிரதான வீதியிலிருந்து 500 மீற்றர் தொலைவிலுள்ள நீரூற்றுப் பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டோம். ஏராளமான காடையர்கள் குவிந்து நின்றிருந்தார்கள் நாங்கள் சென்ற வண்டியை விட்டு இறங்கிய போது அங்கு நின்ற சிங்கள காடையர்கள் அருவருக்கத்தக்க தகாத வார்த்தைகளால் எங்களை பேசியதோடு உள்ளே இறங்கினால் கொல்வோம் என்று கடுமையான தொனியில் எங்களை எச்சரித்து எம்மீது சுடுதேநீரை ஊற்றினார்கள். ஆனால் எம்மை அழைத்து சென்ற காவல்துறையினர் எதுவும் செய்யாமல் அமைதியாக இருந்ததோடு எம்மை திருப்பியும் அழைத்து வந்தனர்.

**கேள்வி: இதனையடுத்து உங்கள் தரப்பில் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?**

பதில்:— பௌத்த மேலாதிக்கம் நிறைந்த இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு அரசியல் விமோசனமுமில்லை, ஆன்மீக சுதந்திரமும் இல்லை

தொடர்ச்சி 11 ஆம் பக்கம் →

# எமது தேசிய சூழலை நல்லாட்சி செய்யும் அதிகாரம் எங்களிடமே இருக்க வேண்டும்

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் சிறப்புப் பேட்டி



எங்களுடைய தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அதிகாரம் எங்களிடமே இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் வடமாகாண முன்னாள் அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார். அதன் முதற்பகுதி வருமாறு,

**கேள்வி: தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் என்ற புதிய கட்சியை ஆரம்பித்து அதற்கான முதலாவது தேசிய மாநாட்டையும் நடாத்தியிருக்கின்றீர்கள். கட்சியின் நோக்கம் என்னவாக இருக்கின்றது?**

பதில்:— தேசியம், சூழலியம், சுயநிர்ணயம் ஆகிய மூன்று கோட்பாடுகளினதும் அடிப் படையில் தமிழ் மக்களின் பிரிக்கமுடியாத தாயகமான வடக்குகிழக்கில் தமிழ் மக்களுக்கான தன்னாட்சி அதிகாரத்தை நிலைநிறுத்துதல் என்பதே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இலக்கு ஆகும்.

**கேள்வி: அரசியலில் சூழலியம் என்ற சிந்தாந்தத்தை உள்ளடக்கியிருப்பது பற்றிக் கொஞ்சம் விளக்கமாகக் குறிப்பிடமுடியுமா ?**

பதில்:— இலங்கை அரசியலில் தமிழ்த்தேசியம் என்பது பெரும்பாலும் அதன் சரியான அர்த்தப் பரிமாணங்களைப் புரிந்துகொள்ளமால் ஒரு வாயப்பாடு போல, வெற்றுக்கோசமாகவே உச்சரிக்கப்படுகிறது. உண்மையில் தமிழ்த்தேசியம் என்ற ஒற்றைச் சொல்லாடலின் உள்ளே தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வாழ்வியலுமே அடங்கிக்கிடக்கிறது. இதில் எமது மொழி, எமது பண்பாடு, எமது வாழ்விடம் என்று இம் மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத அளவுக்கு ஒன்றுக்குள் ஒன்று ஊடுபரவியுள்ளது. இவற்றில் ஒன்றில்லாமல் மற்றையது இல்லை. ஆனால் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு குறித்து நாம் பேசுகின்ற அளவுக்கு எமது சுற்றுச்சூழல் குறித்து நாம் பேசுவதில்லை.

ஒவ்வொரு தேசிய இனமும் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற பிரதேசம் அந்த இனத்தின் தேசியச் சூழல் (யேவழையெட நுஸீஎசைழஸீஅநவெ) எனப்படுகிறது. அந்த வகையில் இலங்கையில் தமிழ் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் தேசியச் சூழல். அதேபோன்று தெற்கில் சிங்கள மக்களுக்கெனவும் ஒரு தேசியச் சூழல் இருக்கின்றது. ஆனால், இரண்டு தேசியச் சூழலும் பண்பியல் ரீதியாக வேறு வேறானவை.

சிங்களமக்களின் தேசியச் சூழலில் மழைக் காடுகள் இருக்கின்றன. எங்களுடைய தேசியச் சூழலில் உலர்காடுகள் இருக்கின்றன. அவர்களின் தேசியச் சூழலில் கித்துள் இருக்கின்றது. எங்களிடம் பனை இருக்கின்றது. அங்கு இரத்தினக்கற்கள் விளைகின்றன. இங்கு இல்மனைற் மணல் கொட்டிக் கிடக்கிறது. அங்கு நம்புட்டான் பழம், இங்கு கூழாம்பழம். இப்படி இரண்டு இனங்களினதும் தேசியச் சூழல் வெவ்வேறானவை என்பதால் எங்களுடைய சூழல் பற்றிய போதிய அறிவு அவர்களுக்கோ, அவர்களுடைய சூழல்பற்றிய போதுமான புரிதல் எங்களுக்கோ இல்லை. இதனால்தான் எங்களுடைய சூழலை நல்லாட்சி செய்யும் அதிகாரம் எங்களிடமே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக, சூழலியம் என்ற சித்தாந்தத்தையும் தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு பேசு பொருளாக முக்கியப் படுத்தியிருக்கின்றோம்.

**கேள்வி: புலிகள் இயற்கை வளங்களைப் பாதுகாத்தார்கள் என்று தென்னிலங்கைத் தரப்புகளே புகழுகின்ற நிலையில் 2009இற்கு பின்னரான நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன?**

பதில்:— விடுதலைப் போராட்டம் என்பது வெறுமனே மண்மீட்புப் போராட்டம் அல்லவே. வருங்காலத் தலைமுறைகள் வாழ்வாங்கு வாழவேண்டுமெனில் இயற்கை வளங்களை வளங்குன்றாது அவர்களிடம் நாம் கையளிக்கவேண்டும். விடுதலைப் புலிகள் சூழல் பாதுகாப்புப் பிரிவு, வனவளப் பாதுகாப்புப் பிரிவு என்று தனியான அலகுகளை நிறுவி யுத்த நெருக்கடிகளின் மத்தியிலும் இந்த விடயத்தில் கவனமாக இருந்தார்கள் என்பது உலகறிந்த உண்மை. ஆனால், 2009இல் முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், எமது மண்வேலிகள் இல்லாத தோட்டம்போல ஆகிவிட்டது.



தடுப்பார் இல்லாததால் மணல், கிறவல், காட்டு மரங்கள் என்று எல்லா வளங்களுமே கண்மூடித்தனமாகச் சுரண்டப்படுகின்றன. அரசாங்கமும், எமது சூழல் குறித்து கொஞ்ச மேனும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. உதாரணத்துக்கு, காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு சுண்ணாம்புக்கல்லை காங்கேசன் துறையில் இருந்து மீளவும் அகழவேண்டும் என்பதில் அ;ரசாங்கம் விடாப்பிடியாக நிற்கிறது. ஏற்கனவே சுண்ணாம்புக்கல் அகழப்பட்டதால் அங்கு அதலபாதளத்துக்குப் பாரிய குழிகள் காணப்படுகின்றன. கடலை அண்டிய பகுதியில் இவ்வாறு தொடர்ந்து சுண்ணாம்புக் கல் அகழ்ந்தால் கடல் நீர் உட்புகுவதற்கான கதவுகளை நாங்களே திறந்து விட்டவர்கள் ஆவோம். இதனாலேயே, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் கிளிங்கர்களை கொண்டுவந்து அரைத்து சீமெந்தை உற்பத்தி செய்யலாம் அல்லது வெளியில் இருந்து சீமெந்தை கப்பல்களில் இறக்குமதி செய்து இங்கு பொதியிடும் வேலையைச் செய்யலாம் என்று நாங்கள் கூறி வருகிறோம்;. ஆனால் இவற்றைச்செவிமெடுக்காமல் நாங்கள் அபிவிருத்திக்கு எதிராக உள்ளோம் என்று அரசாங்கம் தொடர்ந்து பரப்புரை செய்து வருகின்றது. வருங்காலத் தலைமுறைகளைப் பற்றிக் கருத்திலெடுக்காமல் இலாப வேட்கை கொண்டு அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முயல்கின்றது. இவற்றின் அடிப்படையிலேயே எங்களுடைய தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அதிகாரம் எங்களிடமே இருக்கவேண்டும் என்று நான் சொல்லி வருகின்றேன்.

**கேள்வி: விடுதலைப்புலிகள் காடு வளர்த்தார்கள் என்று புகழ்ந்து பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் விடுதலைப் புலிகள் போதைப்பொருள் வியாபாரம் செய்தார்கள் என்று அண்மையில் கூறி இருப்பது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்:— இஸ்லாமியப் பயங்கரவாதிகளினால் ஈஸ்டர் ஞாயிறு அன்று நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பைத் தொடர்ந்தே அவர்களுடன் ஒப்பிட்டு விடுதலைப்புலிகளும் போதைப்பொருள் வியாபாரம் செய்து பெற்ற பணத்திலிருந்தே ஆயுதத்தை வாங்கினார்கள் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். இஸ்லாமியப் பயங்கரவாதம் என்பதும் விடுதலைப்புலிகளின் போராட்டம் என்பதும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிடமுடியாதவை. விடுதலைப்புலிகள் தமிழ் இனத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்தவர்கள். தமிழ் மக்களின் பேராதரவு அவர்களின் பின்னால் இருந்தது. அவர்கள் பொன்னாகவும் பொருளாகவும் விடுதலைப்புலிகளுக்கு வாரி வழங்கினார்கள். பெண்கள் மூக்குத்தி தொடங்கி தாலி வரை மனமுவந்து கழற்றி வழங்கியிருக்கிறார்கள். யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்ற எங்கள் உறவுகள் தங்கள் வியர்வையை டொலர்களாகவும், பவுண்களாகவும் மாற்றிப்புலிகளுக்கு அனுப்பி வைத்தார்கள்;. இதனால்,முஸ்லீம் மக்கள் ஆதரவைப் பெறாத இஸ்லாமியப் பயங்கரவாதிகள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுப் பணம் ஈட்டியதைப் போன்ற தேவை வெகுசன ஆதரவைப்பெற்ற விடுதலைப்புலிகளுக்கு இருந்திருக்கவில்லை. ஜனாதிபதி அவர்களுடைய கூற்று விடுதலைப் புலிகளை மாத்திரம் அல்ல, ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் கொச்சைப்படுத்தியுள்ளது.


தொடரும்...

# கன்னியா வரலாற்றில் பண்பாட்டில் இன அழிப்பு

தீபச்செல்வன்

கன்னியா ஈழத் தமிழர்களின் வரலாற்றில் மிகவும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். ஈழத் தீவு முழுவதும் காணப்படும் தொல்லியல் ஆதார மூலங்கள், ஈழத் தமிழர்கள்தான் இத் தீவின் பூர்வீகக் குடிகள் என்பதை உலகத்திற்கு எடுத்துரைக்கின்றன. ஈழ மண் முழுவதிலும் துடிதுடித்துப் பறந்தபடி, மிக மிக அவசரப்பட்டு புத்தர் சிலைகளை நிறுவி, விகாரைகளை நிறுவி ஏன் பௌத்த சிங்கள மயமாக்கலில் இலங்கை அரசு ஈடுபடவேண்டும்? இத் தீவின் பூர்வீகக் குடிகள் ஈழத் தமிழர்கள் தான் என்ற வரலாற்று உண்மையை மறைக்கவே இவ்வாறு நடக்கிறதா?

வரலாறுகளை வைத்துக் கொண்டுதான் நிகழ்காலத்தை மதிப்பிடவும் வடிவமைக்கவும் வேண்டும் என்றால், ஈழம் தமிழர்களின் நாடு என்பதற்கு, ஈழத் தமிழ் மக்களிடம் ஏகப்பட்ட



வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. ஈழத் தீவு முழுவதும் யாருடைய ஆட்சி மேற்கொள்ளப் பட்டது? என்னென்ன மூலாதாரங்கள் காணப் படுகின்றன என்பது தொடர்பில் சிங்களப் பேரினவாதிகள் கற்றுக்கொள்ள வேண்டும். இன மேலாதிக்கத்திற்கு எதிரான தனி நாட்டுக்கான விடுதலைப் போராட்டத்தின் போது, தமிழ் இனத்தை அழிப்பதுதான் வழியென இலங்கை அரசு கருதியதைப் போன்றே வரலாற்றில் இருந்தும் ஈழமக்களை ஒடுக்க பௌத்த சிங்கள மயமாக்கலை ஒரு உபாயமாக இலங்கை அரசு கையாளுகின்றது.

கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் பாரிய பௌத்த விகாரை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டில் இன விகிதாசாரத்தை சிதைக்கும் — ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் மகிந்த ராஜபக்சவினால் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு நல்லாட்சி அரசு என்று பெயரிட்டுக் கொண்ட இன்றைய அரசு, காணிப் பத்திரம் வழங்கி, பாரிய பௌத்த விகாரை அமைக்கின்றது. வரலாறு முழுவதும் எந்த குடியேற்றங்களுக்கு எதிராக ஈழ மக்கள் போராடினார்களோ அந்தக் குடியேற்றமான மணலாறு குடியேற்றத்தில் பூர்வீகத் தமிழ் குளத்தற்கு சிங்களப் பெயர் சூட்டி திறந்து வைக்கிறார் இன்றைய சனாதிபதி மைத்திரிபால. திருகோணமலையின் குச்சவெளிப் பகுதியில் தமிழர்களுக்குச் சொந்தமான இடங்கள் அபகரிக்கப்பட்டு, அங்கு சிங்கள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கிறது இன்றைய அரசு. இன்னும் சற்று தள்ளி வந்து, இறுதிப் போர் நடந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலையிலும் சைவ ஆலயத்தின் வளாக நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

பன்னெடுங்காலமாக சைவ ஆலயமான பிள்ளையார் கோயில் இருந்த இடத்தை பௌத்த பிக்கு ஒருவர் ஆக்கரமித்து பாரிய விகாரையை அமைத்துள்ளார். அந்த இடத்தில் பிள்ளையாரை வழிபட முடியாதளவுக்கு பிக்குவால் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. எச்சரிக்கை விடுக்கப்படுகின்றன. ஆலயத்தில பறந்த சைவக் கொடிகளை பிடுங்கி எறிந்துள்ளார் பிக்கு. ஆயிரம் பானை வைத்து பொங்குவதற்கும் அப்பிக்குத் தடைகளை ஏற்படுத்தியதும் வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

வடக்கில் இத்தகைய பிரச்சினைகளின் மத்தியில்தான் கிழக்கில் கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியின் ஆக்கிரமிப்புக்கு எதிராக வடக்கு கிழக்கு இளைஞர்கள் திரண்டுள்ளனர். கடந்த 16ஆம் திகதி கன்னியா மரபுரிமை அமைப்பு போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தது. கன்னியா வெந்நீரூற்று ஈழத் தமிழ் மக்களின் சமய வழிபாடுகளுடனும் பண்பாட்டுடனும் இரண்டறக் கலந்தது. வடக்கில் கீரிமலையும் கிழக்கில் கன்னியாவும் இறந்தவர்களின் ஈமச்சடங்கு வழிபாட்டுடன், பண்பாட்டுடன் தொடர்புடையது. இவ் இரு இடங்களிலும் வடக்கு கிழக்கை சேர்ந்த ஈழத் தமிழ் மக்கள் சென்று தமது சடங்குகளையும் வழிபாடுகளையும் நிறைவேற்றுகின்றனர்.

பண்டைய காலத்தில் ஈழத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னான இராவணன் ஒரு சைவ பக்தன். அவன் தன்னுடைய தாயின் மரணச் செய்தி கேட்டு, தனது வாளினை ஏழு இடங்களில் குத்தியதாகவும் அவற்றிலிருந்து சுடு நீர் கிணறுகள் தோன்றியதாகவும் பின்னர், தனது தாயின் அந்திமக் கிரியைகளை அவன் அங்குதான் மேற்கொண்டான் என்றும் இலக்கிய — இதிகாச, தொல்லியல் ஆதாரங்கள் பலவும் கூறுகின்றது. ஈழத்தின் கிழக்கில் திருக்கோணேச்சர ஆலயத்திற்கு தமிழ் சைவ சமய இலக்கிய வரலாற்றில் உள்ள முக்கியத்துவம் கன்னியா வெந்நீரூற்றுக்கும் உண்டு.

சுதந்திர சிலோனில் மாத்திரமின்றி அதற்கு முந்தைய காலத்திலும், ஈழத்தை, குறிப்பாக கிழக்கையும் அதிலும் திருகோணமலை மற்றும் அம்பாறையை சிங்கள பௌத்த மயப்படுத்துகின்ற முயற்சிகள் இடம்பெற்று வந்துள்ளன. தெற்கில் ஏராளமான இடங்களில் பௌத்த சின்னங்கள் காணப்படுகின்றன. அத்துடன் போதியளவு நிலப் பகுதிகளும் வெறுமையாக காணப்படுகின்றன. அப்படியிருக்க ஏன், வடக்கு கிழக்கில் வந்து புத்தர் சிலைகளை வைக்க வேண்டும்? ஏன் விகாரைகளை கட்ட வேண்டும்? ஏன் சிங்கள மக்களைக் குடியேற்ற வேண்டும்? மாத்தறையில் இருந்தும் அம்பாந்தோட்டையில் இருந்தும் ஏன் சிங்கள மக்களை கொண்டு வந்து குடியேற்ற வேண்டும்? நிச்சயமாக இன அழிப்புக்காகவே. அதுவே வரலாறு முழுதும் நடக்கின்றது.




இந்த நிலையில் கன்னியா வெந்நீரூற்றிலும் சிங்கள பௌத்தமயமாக்கல் திணிக்கப்படுகின்றது. சுற்றுலாப் பிரயாணிகளின் கவனத்தை ஈர்த்த இப் பகுதியில் சிங்களத்தில் பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் சிங்கள பௌத்தத்தை திணிக்கும் வாசகங்களை நுழைக்கின்ற கைங்கரியங்களும் நடக்கின்றன. நல்லாட்சி எனப்படும் நாடக ஆட்சியில் இங்கே பூர்வீக சைவ ஆலயம் ஒன்றின் அத்திவாரத்தை அழித்துவிட்டு, அங்கு பௌத்த தாது கோபுரத்தை அமைக்க சிங்கள பௌத்த தொல்லியல் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டமையே இங்கு பிரச்சினை. சனாதிபதி மைத்திரியின் பணிப்புக்கு இணங்கவே, அவரது செயலாளர் மற்றும் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஆகியோரின் ஒப்புதல்களுடன் தொல்லியல் திணைக்களம் இந்த வேலையை செய்ய முடிவு செய்ததாக கூறுகின்றது. முன்னைய காலத்தில் மகிந்த ராஜபக்ச, தனது இராணுவத்தை கொண்டு செய்த சிங்கள பௌத்த மயமாக்கலை இப்போது மைத்திரிபால சிறிசேன தனது திணைக்களத்தை கொண்டு செய்வித்து வருகின்றார். தமிழ் நிலத்தில் விகாரை கட்டுவதைத்தான் இத் தொல்லியல் திணைக்களம் தமது முழு நேரப் பணியாக கொண்டுள்ளது. இதில் தமிழ் உத்தியோகத்தர்கள் இல்லை. முழுக்க முழுக்க சிங்கள மயம். அத்துடன், இருக்கும் ஒரு சிலரும் வாய் திறக்க முடியாத நிலை.

தமிழ் மக்களின் வாக்குகளில் சனாதிபதியாக தீர்மானிக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேன, ஆயிரக்கணக்கான விகாரைகளை தமிழ் நிலத்திற்கு பரிசளித்து தமிழ் இனத்தை வரலாறு முழுதும் அழிக்கும் திட்டத்திற்கு ஒப்பமிட்டுள்ளார். மகிந்த ராஜபக்சவின் செயற்பாடுகளையும் விஞ்சியது இது. இப்படியான சூழலில்தான், கன்னியா ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்திற்கு தடை உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. வடக்கு கிழக்கில் வந்து பிக்கு விகாரை கட்டலாம். ஆனால் வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் தமது உரிமைகளை பற்றி அமைதியாக பேசக்கூடாது. கோயில்களில் வழிபடக்கூடாது. அதற்குத் தடை விதிப்பதுதான் நல்லாட்சி. வடக்கு கிழக்கில் இருந்து திரண்ட இரண்டாயிரம் இளைஞர்களின் மத பண்பாட்டுணர்வை சிங்கள அரசு ஆயுத இராணுவ, காவல்துறை பலம் கொண்டு அடக்கியமை மிகப் பெரும் சனநாயக உரிமை மீறலாகும்.

கன்னியா போராட்டத்தில்கூட தமிழ் மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பலரைக் காணவில்லை. அத்துடன் சனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஆதரவளிக்கும் நமது தலைமைகளால் இவைகளை தடுத்து நிறுத்த முடியவில்லை என்பதும், இதனை அரச மட்டத்தில் பேசி தீர்க்க முடியவில்லை என்பதும் எமது அரசியல் பயணத்தின் தோல்வியாகும். அத்துலிய இரத்தினதேரருக்காக அரசே ஆடியது. நாடே கலங்கியது. தமிழ் சித்தர் அகத்தியார் அடிகள்மீது சுடுதண்ணீர் ஊற்றப்பட்டது. தமிழ் மக்களுக்கு எத்தகைய நிலையோ, அதுவே தமிழ் கடவுளுக்கும் மதகுருமாருக்கும். சர்வதேச ரீதியாக இலங்கையை பாதுகாப்பதிலும் இன்றைய ஆட்சியை பாதுகாப்பதிலும் எமது தலைமை காட்டும் ஒற்றுமையான அக்கறையை கன்னியா விடயத்தில் காட்டவில்லை. கன்னியா பிள்ளையாரையும் நீராவியடிப் பிள்ளையாரையும் காப்பது ஒட்டுமொத்த நிலத்தையும் இனத்தையும் காப்பதாகும்.

# பத்து ஆண்டுகளைப் போலவே பதினோராவது ஆண்டும் கடந்து செல்லுமா?

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**

“இந்த நூற்றாண்டின் கறை” என்பது சீனா அரசு அங்கு வாழும் உகூர் இன முஸ்லிம் மக்கள் மீது மேற்கொண்டுவரும் மத ரீதியான துன்புறுத்தலாம். கூறுவது அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் மைக் பொம்பியோ.

அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் இந்த வாரம் இந்த கருத்தை தெரிவிக்கும்போது சிங்கள அரசின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமைதியான வழிகளில் தமது காலாச்சார பாரம்பரிய இடமான கன்னியா வெந்நீர் ஊற்றினை மீட்கப் போராடிய தமிழ் மக்கள் மீது பௌத்த துறவிகளும், சிங்களவர்களும் கொதிக்கும் நீரை ஊற்றியுள்ளனர்.

அதாவது சீனா அரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையையும் உன்னிப்பாக அவதானிக்கும் அமெரிக்காவுக்கு ஏனைய நாடுகள் அங்கு வாழும் சிறுபான்மை இனங்கள் மீது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மட்டும் கண்ணில் தெரிவதில்லை. ஆனால் அமெரிக்காவின் எந்த அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்வதற்கு சீனா தயாராகிவிட்டது. எதிர்த்து நிற்பதன் மூலமே தாம் தப்பிப்பிழைக்க முடியும் என்பது, வரலாறு சீனாவுக்கு கற்றுக்கொடுத்த பாடம். எனவே தான் அமெரிக்காவின் எதிர்ப்புக்களையும் மீறி சிறீலங்காவின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் நிலையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது சீனா.

அதனை சினோபெக் என்ற எரிபொருள் நிறுவனம் ஒன்றின் ஊடாக மேற்கொள்வதன் மூலம் அரசியல் நெருக்கடிகளை தவிர்த்து பொருளாதார நிறுவனம் தொடர்பான நடவடிக்கையாக அதனை மாற்றி அமைத்துள்ளது சீன அரசு. இந்தியாவின் இந்தியன் அக்கோட் குழுமம் என்ற நிறுவனம் மேற்கொண்ட ஏறத்தாழ 4 பில்லியன் டொலர்கள் பெறுமதியான எரிபொருள் சுத்திகரிப்பு நிறுவனத்திற்குப் போட்டியாக சீனா தனது நிறுவனத்தை களமிறக்கியுள்ளது.

ஆனால் சீனாவின் திட்டத்தில் இரண்டு இலாபம் உண்டு, ஒன்று உலகில் பயணம் செய்யும் சரக்கு கப்பலிகளில் மூன்றில் இரண்டு பங்கு கப்பல்கள் இந்து சமுத்திர கடற் பிரதேசத்தை அம்பாந்தோட்டை துறைமுகம் ஊடாக கடந்தே செல்கின்றன. எனவே அவ்வாறு செல்லும் பெருமளவான கப்பல்களுக்கு எரிபொருளை வழங்குவதன் மூலம் வியாபாரத்தை பெருக்குவது, இரண்டாவது தனது முத்துமாலைத்திட்டத்தில் பயணிக்கும் தனது சரக்கு மற்றும் கடற்படைக் கப்பல்களின் எரிபொருள் விநியோகத்தை பாதுகாப்பதன் மூலம் தனது வழங்கல் பாதையை உறுதி செய்வது.

சிறீலங்கா விவகாரத்தில் சீனாவும் இந்தியாவும் தமக்கான இடங்களைத் தெரிவு செய்து தமது ஆளுமைகளை வலுப்படுத்தும் அதேசமயம், அமெரிக்கா அதன் முயற்சிகளில் முன்நகரமுடியாத நிலையிலேயே தற்போதும் உள்ளது.


தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பை மனித உரிமை மீறல்கள் என்ற பதத்திற்குள் சுருக்கி அதனை கையில் எடுத்து தமிழ் மக்களை ஏமாற்றியது போல சிறீலங்கா அரசையும், இந்தியாவையும் ஏமாற்றுவதன் மூலம் சிறீலங்காவில் படைத்தளம் ஒன்றை நிரந்தரமாக அமைப்பதற்கு அமெரிக்கா மேற்கொண்ட முயற்சி இந்தியாவின் நேரடியற்ற எதிர்ப்பினால் அந்தரத்தில் தொங்கி நிற்கின்றது.

ஆனால் சீனா தனது அடுத்த நகர்வை சத்தமின்றி மேற்கொண்டுள்ளது. சீனாவின் நடவடிக்கைகளை கடுமையான எதிர்க்காத இந்தியா அமெரிக்காவின் நடவடிக்கைகளை தென்னிலங்கை அரசியல்வாதிகளின் ஊடாக வெற்றிகரமாக முறியடித்துள்ளது. 1987 களில் இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொண்டது போன்ற ஒரு நகர்வையே இந்தியா தற்போது விரும்புகின்றது.




ஆனால் இந்த பூகோள நலன்சார் அரசியலில் தமிழ் இனத்திற்கான ஆதாயம் என்ன என்பது தான் பிரதான கேள்வி? நாம் எமக்கான தனித்துவத்தை இந்த பிரச்சனைக்குள் உள்நுழைக்க வேண்டும் என்றால் முதலில் அதற்கு பலமான அரசியல் தளம் எம்மிடம் இருக்க வேண்டும். ஆனால் அது தற்போது எம்மிடம் இல்லை.

தாயகத்திலும் புலத்திலும் அதற்கான ஏதுநிலை ஒன்று உருவாகுவதை சிறீலங்கா அரசு தனது புலனாய்வு அமைப்புக்கள் மூலம் சிதைத்துள்ளது. இந்த நடவடிக்கைக்கு தமிழ்க் குழுக்களையே அது பயன்படுத்தியும் உள்ளது. உதாரணமாக தற்போது மாற்று அரசியல் தளம் ஒன்று தமிழ் மக்கள் மத்தியில் உருவாகுவதை தடுப்பதிலும் தமிழ்க் குழுக்களே பின்னணியில் உள்ளன. சிங்கள அரசு அதனைச் செய்யவில்லை.




தாயகத்தில் தற்போது மக்கள் போராட்டம் மெல்ல மெல்ல உக்கிரம்பெற்று வருகின்றது. நீராவியடி பிள்ளையார் கோவிலிலும், கன்னியா வெந்நீர் ஊற்றிலும், காணாமல்போனவர்களின் உறவுகள் மேற்கொண்டுவரும் தொடர் போராட்டங்களிலும் அதனை நாம் காணலாம். ஆனால் அதனை சரியான வழியில் நகர்த்துவதற்கு பலமான அரசியல் அணி ஒன்று அவசியமானது. ஆனால் அதனை உருவாக்குவதில் தான் சிக்கல் தோன்றியுள்ளது. தற்போது சிறீலங்காவுக்கு சென்றுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதியாக ஒன்று கூடுவதற்கான உரிமை தொடர்பான அதிகாரி கிளெமென்ட் நயாலெட்சோசி வூல் அவர்கள் தனது அறிக்கையை எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கவுள்ளார்.

சிறீலங்காவில் தமது உரிமைகளுக்காக சிறுபான்மை இனம் அமைதியாக ஒன்று கூடுவதற்குரிய சுதந்திரம் உள்ளதா என்பதை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை கொண்டு அவருக்கு அறிக்கை மூலமாக விளக்கம் தர யார் முயற்சிகளை எடுத்துள்ளார்கள் என்பது தான் தற்போதுள்ள வினா?

அமைதியாக தமிழ் மக்கள் கூடும் இடங்களில் ஆயுதம் தரித்த சிங்கள இராணுவம் குவிக்கப்படுகின்றது, தமிழ் மக்கள் மீது சிங்கள மதகுருக்களும், சிங்களவர்களும் கொதிநீரை ஊற்றுக்கிறனர், தமிழ் மக்கள் செல்லும் பேரூந்துகளின் சக்கரங்களில் இருந்து காற்று பிடுங்கப்படுகின்றது. தமிழ் மக்கள் கூடுவதை தடை செய்யும் சிங்கள நீதிமன்றங்கள் அதே இடத்தில் சிங்களவர்கள் கூடுவதை அனுமதிக்கின்றது.

ஆனால் இவற்றை எல்லாம் அந்த அதிகாரியிடம் எடுத்துக் கூறுவதையோ, அல்லது அதிகாரியை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சந்திப்பதையோ சிறீலங்கா அரசும் அதனைக் காப்பாற்றத் துடிக்கும் தமிழ் அரசியல்வாதிகளும் அனுமதிக்கமாட்டார்கள். ஆனால் அதனையும் தாண்டி அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது தளத்தில் உள்ள சமூக அமைப்புக்களினதும், ஏனைய தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளினதும் கடமை. அதனை நெறிப்படுத்தி, ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்கவேண்டியது புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் புத்தி—ஜீவிகளின் கடமை.

ஆனால் நாம் அதனை தவறவிட்டுவிட்டு, சிங்கள அரசினால் தனக்கு சாதகமாக பயன்படுத்தப்படும் அதிகாரிகள் ஐ.நாவில் சமர்ப்பிக்கும் அறிக்கைக்கு எதிராக ஐ.நா வாசலில் நின்று கோசம் போடுவதால் எந்த பலனும் கிட்டப்போவதில்லை, மாறாக பத்து ஆண்டுகள் கடந்து சென்றதைப்போல பதினோராவது ஆண்டும் கடந்து செல்லும் என்பதே யதார்த்தம்.

# கறுப்பு யூலை இனப்படுகொலை இன்றும் தொடர்கின்றது


ஆர்த்திகன்

பிரித்தானியாவிடம் இருந்து சிறீலங்கா சுதந்திரம் பெற்ற பின்னர் சிறுபான்மை தமிழ் மக்களுக்கு எதிராக பெரும்பான்மை சிங்கள மக்களும் அதன் அரசுகளும் மேற்கொண்டு வரும் தொடர் இனஅழிப்புக்களில் மிகப்பெருமளவில் வெளிப்படையாக அரசின் ஆதரவுடன் உலகம் அறிய சிறீலங்காவின் தலைநகர் தொடக்கம் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டதே 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு யூலை இனப்படுகொலை.

அன்று பல ஆயிரம் தமிழ் மக்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டதுடன், பெருமளவான தமிழ் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர், தமிழ் மக்களின் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. சிங்கள அரசின் பாதுகாப்பில் சிறையில் இருந்தவர்களும் சிறைக்காவலர்கள் மற்றும் சிங்களக் காவல்துறையின் உதவியுடன் படுகொலைசெய்யப்பட்டனர்.

அதனை கலவரமாக சித்தரித்தது சிறீலங்கா அரசு. உலகநாடுகள் அனுதாபம் தெரிவித்தன. அகதிகளாக ஓடிய தமிழ் மக்களுக்கு புகலிடத் தஞ்சம் வழங்கின, ஆனால் இனப் படுகொலையாளிகள் தண்டிக்கப் படவில்லை.

தாம் வெளிப்படையாக மேற்கொண்ட இனப் படுகொலையை கூட உலகம் கேட்கத் தவறியது சிங்கள அரசுகளுக்கு புதிய உற்சாகத்தையும், சிங்களக் காடையர்களுக்கு அதிக துணிச்சலையும் வழங்கியது. எந்த உயிர்களுக்கும் தீங்கு விளைவிக்க கூடாது என்ற தத்துவத்துடன் துறவறம் புகுந்து கௌதம புத்தரின் வழியை பின்பற்றிய பௌத்த துறவிகளும் எதற்கும் துணிந்த காடையர்களாக மாறினார்கள். இனப்படுகொலைகள் தொடர்ந்தன, வடக்கிலும், கிழக்கிலும் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக படுகொலை செய்யப்பட்டனர்.



படுகொலை செய்யப்பட்ட பெண்களையும், குழந்தைகளையும், வயோதிபர்களையும் பயங்கரவாதிகள் என சிங்கள அரசு கூறியதை அனைத்துலக சமூகமும், ஐ.நாவும் கேட்டு அமைதியாக இருந்தன.

அதனால் சிறீலங்கா அரசின் இனப்படுகொலை முழு வீச்சுடன் தொடர்ந்தது. அது முள்ளிவாய்க்கால் அவலம் வரை சென்றது. மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களை இராணுவம் முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தியது, அங்கு இடம்பெற்ற இனப்படுகொலையை சாட்சியப்படுத்தக் கூட ஐ.நா விரும்பவில்லை. சிங்கள அரசின் சொற்படி மக்களை கொலைக் களத்திற்குள் தள்ளிவிட்டு ஐ.நா வெளியேறியது. தம்மை விட்டுவிட்டு செல்லவேண்டாம் என ஐ.நாவிடம் உயிர்ப்பிச்சை கேட்ட அப்பாவி மக்களில் ஆயிரக்கணக்கானோர் தற்போது உயிருடன் இல்லை. அவர்களுக்கான நீதியும் வழங்கப்படவில்லை. 36 ஆண்டுகள் கடந்தும் கறுப்பு ஜுலை இனப்படுகொலைக்கான நீதி இன்றுவரை கிட்டவில்லை. 10 ஆண்டுகள் சென்றும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கான நீதி கிட்டவில்லை.

இவை எல்லாவற்றிற்கும் காரணம் என்ன? ஒரு பெரும் இனம் சிறுபான்மை இனத்தின் மீது மேற்கொண்ட இனப்படுகொலையை தமது பூகோள மற்றும் வர்த்தக நலன்கருதி புறக்கணித்த மேற்குலகமும் அனைத்துலக சமூகமும், அவர்களுக்கு சார்பாக இயங்கும் ஐ.நாவும்தான் இதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவர்கள் மீது அழுத்தங்களை பிரயோகிக்கத் தவறிய தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் அதில் பங்குகள் உண்டு. ஒரு இனஅழிப்பை தடுக்கத் தவறிய அல்லது அதனை மேற்கொண்டவர்களுக்கு தண்டனையை வழங்கத் தவறிய இவர்களால் தான் சிங்கள அரசு இன்றும் தனது இனப்படுகொலையை தொடர்ந்து மேற்கொள்கின்றது.

வடிவங்கள் மாற்றமடைந்துள்ளதே தவிர சிங்கள அரசின் இனவிரோதமும், இனஅழிப்புச் சிந்தனையும் மாற்றமடையவில்லை. எனவே தான் தமது காலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த தாயகப் பிரதேசத்தை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்பதற்காக அமைதியான வழிகளில் போராடிய தமிழ் மக்கள் மீது கொதிநீரை ஊற்றுகின்றனர் பெரும்பான்மை சிங்கள மக்கள். அதனை ஊக்குவிக்கின்றனர் பௌத்த மதகுருக்கள். இன்று கறுப்பு யூலை இனப்படுகொலையயின் 36 ஆவது ஆண்டை நினைவுகூரும் தமிழ் இனம் தற்போதும் ஒரு கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புக்குள் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடலாகாது.

# கன்னியா விவகாரம் தொடர்பாக க.வி.விக்கினேஸ்வரன் அறிக்கை

கன்னியா வெந்நீருற்று பகுதியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தை உடைத்து அந்த இடத்தில் விகாரை கட்டுவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்பு மற்றும் கலாசார ரீதியான இனப்படுகொலையின் ஒரு அப்பட்டமான வெளிப்பாடாகும் என்று க.வி. விக்கினேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்...

தமிழ் மக்களின் ஆயிரம் ஆயிரம் காலங்களுக்கு முற்பட்ட இந்த புராதன வரலாற்றுப் பகுதியை தமிழ் மக்கள், தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் கடும் எதிர்ப்புக்களைக் கிஞ்சித்தும் பொருட்படுத்தாமல் பிள்ளையார் ஆலய அத்திவாரத்தை உடைத்து விகாரை கட்டப்பட்டுவரும் செய்தி தமிழ் மக்களின் நெஞ்சங்களை பிளப்பதுபோல இருக்கின்றது.

இலங்கையின் ஆதிவாசிகளான தமிழ் மக்களின் இருப்பு இன்னும் இந்த நாட்டில் எத்தனை காலத்துக்கு இருக்கப்போகின்றது என்ற நிதர்சனமான கேள்வியையும் மனக் கிலேசத்தையும் ஏற்படுத்தும் வகையில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு பௌத்தமய மாக்கல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முன்னெப்போதும் இல்லாதவகையில் காணி அபகரிப்பு நடவடிக்கைகளும் பௌத்தமய மாக்கல் நடவடிக்கைகளும் நன்கு திட்டமிடப்பட்ட முறையில் அரச இயந்திரத்தின் பணிகளாக்கப்பட்டு இராணுவத்தின் உதவியுடன் முழுமூச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டு வாழ்விடங்களின் வரலாறு திட்டமிடப்பட்ட வகையில் திரிபுபடுத்தப்பட்டு செயற்கையான சான்றுகள் உருவாக்கப்பட்டு பௌத்தமயமாக்கலும் சிங்களமயமாக்கலும் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம், மகாவலி அதிகாரசபை, வீடமைப்பு அதிகாரசபை, வன இலாகா, வன ஜீவராசிகள் திணைக்களம் இராணுவம் போன்றன நன்கு ஒருங்கிணைந்தவாறான நடவடிக்கைகள் மூலம் வெளிப்படையாகவே முன்னெடுத்து வரப்படுகின்றன. சிங்கள அரச தலைவர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பினை இவற்றுக்குப் பகிரங்கமாகவே அளித்து வருகின்றனர். இராணுவத்தினர் இதன் பொருட்டு அவர்களாலேயே பாவிக்கப்படுகின்றனர். கன்னியா வெந்நீரூற்று பகுதியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தை உடைத்து அந்த இடத்தில் விகாரை கட்டுவதை இலங்கை சனாதிபதி மைத்ரிபால சிறிசேன மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோர் நேரடி உத்தரவுகளை வழங்கி ஊக்குவித்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

கன்னியாவில் மட்டுமன்றி வடக்கு கிழக்கின் ஏனைய இடங்களிலும் பெருமளவில் இந்த நடவடிக்கைகள் திடீரென்று முழுமூச்சாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு கொக்கிளாயில் பௌத்த மக்கள் எவரும் இல்லாத இடங்களில் விகாரை அமைக்கப்படுவதை எம்மால் தடுக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் பாரிய சிங்கள குடியேற்றத்துக்கான ஆயத்தமாக நாவற்குழியில் பாரிய பௌத்த விகாரை எனது வீட்டில் இருந்து ஒரு சில மைல்கள் தூரத்தில் அமைக்கப்பட்டு இராணுவத்தின் துணையுடன் சில தினங்களுக்கு முன்னர் திறக்கப்பட்டுள்ளதை தடுக்க முடியவில்லை. வலிகாமத்தில் எமது மக்களின் காணிகளில் விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலைமை கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் தொடர்கின்றன. இதேவேளை, யாழ் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல்நகர் வளாகத்தில் அரசநிதியில் ஒரு கோடி ரூபாவிற்கு மேற்பட்ட பண ஒதுக்கீட்டில் ஒரு ஏக்கர் காணியில் பாரிய விகாரை ஒன்றை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக அறியமுடிகின்றது. அங்கு பயிலும் சிங்கள மாணவர்கள் விகாரைக்கு சென்று வழிபடுவதற்கு ஒரு விகாரை தேவை என்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஆனால், அதற்காக ஒரு ஏக்கர் காணியில் பாரிய ஒரு பௌத்த விகாரை அமைக்கும் அரசாங்கத்தின் உள்நோக்கத்தை எமது பல்கலைக்கழக அதிகாரிகளும் பொது மக்களும் புரிந்துகொள்ளவேண்டும். பௌத்த மாணவர்களின் வழிபாட்டுக்காகத்தான் விகாரை என்றால் அதனை சிறிய அளவில் நிர்மாணித் திருக்கலாம். அதேவேளை கிளிநொச்சியில் பௌத்த மாணவர்கள் சென்று வழிபடுவதற்கு ஏற்கனவே விகாரைகள் இருக்கின்றன. ஆகவே எமது அதிகாரிகள் அத்தகைய விடயங்களில் மிகவும் அவதானமாக செயற்படவேண்டும் என்று வினயமாக வேண்டிக்கொள்கின்றேன்.

அத்துடன், சனாதிபதியின் ‘கவனக்குறைவு’ என்று கூறப்படும் ஏப்ரல் 21ந் திகதி குண்டு வெடிப்பு நிகழ்வுகளுக்கும் திடீரென்று மேற்கொள்ளப்படும் இந்த பௌத்த மயமாக்கல் நிகழ்வுகளுக்குமிடையில் சம்பந்தம் இருக்கின்றனவா என்று கேட்க வேண்டியுள்ளது. குண்டு வெடிப்பின் பின்னர் வடமாகாணத்தில் இராணுவத்தினரின் தேடுதல் முயற்சிகள் கடுமையாக இருந்தன. பௌத்த மயமாக்கலுக்கு தமிழ் மக்கள் இடையூறு

தொடர்ச்சி 11ஆம் பக்கம் ➔

# மும்முனைப் போட்டியில் ஐ.தே.க. விட்டுக்கொடுக்க மறுக்கும் ரணில்

**பூமிகன்**

சனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தல் வர முன்னரே இரு அணிகளுக்குள்ளும் தமது வேட்பாளர் யார் என்ற சர்ச்சை சூடுபிடித்துள்ளது. மகிந்த ராஜபக்சவின் மொட்டு அணி எடுக்கப்போகும் தீர்மானம்தான் ஐ.தே.க.விலும் தாக்கத்தை ஏற்படுத்தும். மொட்டு அணியில் கோத்தாவின் பெயர்தான் முன்னணியில் உள்ளது. ஆனால், ஐ.தே.க.வில் மூன்று பெயர்களும் சமபலத்துடன் இருக்கிறது. கோத்தாவை இறக்குவதென மொட்டு முடிவெடுத்தால், சஜித்தைப் போட்டிக்கு இறக்கினால்தான் வெல்ல முடியும் என்ற கருத்து ஐ.தே.க.வில் உள்ளது. அதேவேளையில், புதிய குழப்பம் ஒன்றும் ஐதே.க.வில் ஆரம்பமாகியிருக்கின்றது.



மொட்டு அணி தமது வேட்பாளரை அறிவிக்கும் வரையில் பார்த்துக்கொண்டிருக்காமல் தமது வேட்பாளரை உடனடியாக அறிவிக்க வேண்டும் என ஐ.தே.க. உறுப்பினர்கள் தலைமைக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளார்கள்.

ஐ.தே.க. மற்றும் அதனுடன் இணைந்து செயற்படும் கட்சிகள் இணைந்த புதிய முன்னணி ஒன்றை எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்போகின்றார்கள். சனாதிபதித் தேர்தலை இலக்காகக்கொண்டு தமது கூட்டணிக்கு புதிய பெயர், புதிய சின்னம் என புதிய தோற்றம் ஒன்றைக்கொடுப்பதற்கு ஐ.தே.க. தலைமை திட்டமிடுகின்றது. அதனுடன் சனாதிபதி வேட்பாளர் யார் என்ற விபரமும் அறிவிக்கப்பட்டு, தேர்தலை நோக்கிய செயற்பாடுகள் முடுக்கிவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், ஐ.தே.க. வேட்பாளர் யார் என்பதற்குத்தான் இன்னமும் பதில் கிடைக்கவில்லை.

ஐ.தே.க. சார்பாக களமிறங்குபவர் சிறுபான்மையினருடைய ஆதரவைப் பெறக் கூடியவராக இருக்கவேண்டும் என்ற கருத்து உள்ளது. சிறுபான்மையினருடைய ஆதரவைப் பெறக் கூடியவரென்றால் ரணில் அல்லது கருதான் இறங்கவேண்டும் என்றும் சொல்லப்படுகின்றது. இதில் கருவுக்குள்ள ஒரேயொரு மைனஸ் என்னவென்றால், அவர் சில காலம் மகிந்தவுடன் இணைந்து அமைச்சர் பதவியையும் அனுபவித்தவர். ஐ.தே.க.வில் களத்தில் உள்ள மூவரில் கூட்டமைப்பு யாரை ஆதரிக்கும் என்ற ஒரு கேள்வியும் இப்போது எழுப்பப்படுகின்றது. கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அதன் தலைமை ரணிலைத்தான் விரும்புவதாகத் தெரிகின்றது. ஆனால், ஐ.தே.க.வுடன் இணைந்து செயற்படும் மனோ — திகா— ராதா அணிகளும், ஹக்கீம்— ரிஷாத் ஆகியோரும் சஜித்தை விரும்புகிறார்கள்.

சனாதிபதி வேட்பாளர் யார் என்பதை அறிவிக்குமாறு கட்சி ஐ.தே.க. எம்.பி.க்கள் தலைமைக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியிருப்பதாக உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன. கட்சியின் செயற்குழுவை அவசரமாகக்கூட்டி, இது குறித்த தமது முடிவை அறிவிக்குமாறு அவர்கள் கேட்டுள்ளார்கள். தமது ஊர்களுக்குச் செல்லும் போது, வாக்காளர்கள் இந்தக் கேள்வியைத்தான் தம்மிடம் எழுப்புவதாகத் தெரிவிக்கும் எம்.பி.க்கள், சனாதிபதி வேட்பாளர் யார் என்பதை அறிவித்தால்தான் தமது பணிகளை தமது தொகுதிகளில் செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் தலைமைக்கு கூறியிருக்கின்றார்கள்.

கட்சி எம்.பி.க்களில் ஒரு பகுதியினர் சஜித்தை சனாதிபதி வேட்பாளராக நியமிப்பதற்கான செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றார்கள். சஜித் தன்னுடைய விருப்பத்தை கட்சித் தலைமைக்கு இதுவரையில் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லை. ஆனால், மாத்தறையில் கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து முதல் தடவையாக தனது விருப்பத்தை சஜித் வெளியிட்டார். அமைச்சர் மங்கள அரசியலில் பிரவேசித்து 30 ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதை முன்னிட்டே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனைவிட சஜித்தின் மனைவி, ஜலனியும் தன்னை எதிர்கால "முதற் பெண்மணி" என குறிப்பிட்டமையும் சஜித் ஜனாதிபதித் தேர்தலில் இறங்குவதற்கான காய் நகர்த்தலை ஆரம்பித்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்தியது.

ஜனாதிபதி வேட்பாளராக தன்னைப் போட வேண்டும் என்பதற்கான பரப்புரைகளை சஜித் தீவிரமாக முன்னெடுக்கவில்லை என்பது உண்மைதான். அவருக்கு ஆதரவான எம்.பி.க்களே சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றார்கள். சஜித்தும் இதற்கு இசைவான வகையிலேயே தனது பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்துகின்றார். ரணிலுடன் நெருக்கமானவர்களாக இருந்த சிலரும் இப்போது சஜித்தை ஆதரிக்கத் தொடங்கியிருப்பது ரணில் முகாமைப் பலவீனப்படுத்தியிருக்கின்றது. மங்கள பகிரங்கமாகவே தன்னுடைய நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றார். மலிக்கும் சஜித்தையே ஆதரிப்பதாக உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

சஜித்தும் கட்சியின் நிலைப்பாட்டுக்கு முரணாக சில விடயங்களில் செல்ல முற்படுகின்றார். குறிப்பாக, மரண தண்டனைக்கு எதிரான நிலைப்பாட்டை கட்சி எடுத்திருக்கும் நிலையில், அதற்கு முரணாக மரண தண்டனைக்கு ஆதரவான நிலைப்பாட்டை அவர் எடுத்திருக்கின்றார். இதன் மூலம், கட்சியில் தனித்துவத்தை வெளிப்படுத்த சஜித் முற்படுகின்றார். மைத்திரிக்கு ஆதரவான நிலைப்பாடு இது எனவும் கட்சிக்குள் சொல்லப்படுகின்றது. சஜித் போட்டியிட்டால், மைத்திரியின் ஆதரவை பெறக் கூடியதாக இருக்கும் எனவும் சொல்லப்படுகின்றது. இதன் மூலம் 5 முதல் 7 வீதம் வரையிலான வாக்குகளை அவர் அதிகமாகப் பெறலாம். . அதனைவிட, மைத்திரி பதவியிலிருக்கும் நிலையிலேயே தேர்தல் நடைபெறும் என்பதால், சட்டம் ஒழுங்கு கூட சஜித்துக்கு ஆதரவாக கொஞ்சம் வளைந்துகொடுக்கும்.

ஐ.தே.க.வில் மற்றொரு குழுவினர் கரு ஜயசூரியவைக் களமிறக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றார்கள். தானும் தயாராக இருப்பதாக கருவும் அறிவித்துவிட்டார். தான் போட்டியிட முடியாது என்ற ஒரு நிலை வரும்போது கருவைக் களத்தில் இறக்கும் முடிவுக்கு ரணிலும் வரலாம் எனவும் உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

சமூக ஊடகங்களில் இந்த மூவரையும் மையப்படுத்திய பரப்புரைகள் தீவிரமடைந்திருக்கும் நிலையில், தாக்குதல்களும் ஆரம்பமாகி—யிருக்கின்றன. சஜித்தை களமிறக்கும் முடிவு எதனையும் கட்சி ஒருபோதும் எடுக்காது என ரவி கருணாநாயக்க பகிரங்கமாகவே தெரிவிக்க மற்றொரு மோதலுக்கான மற்றொரு களம் திறக்கப்பட்டது. இந்த மோதல்களைப் பார்த்துக்கொண்டு வழமைபோல கூலாக இருக்கிறார் ரணில். அவருக்கு ஆதரவாகவும் ஒரு குழுவினர் களத்தில் இறங்கியிருக்கின்றார்கள். கள நிலவரங்களை அவதானிக்கும் சிலருடைய கருத்தின்படி ரணிலுக்கான ஆதரவு குறைவடைந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. ஆனால், சனாதிபதிக் கனவை அவர் கைவிட்டுவிடவில்லை. அடுத்த வாரம் கர்னபடகவிலுள்ள மூலாம்பிகை கோவிலுக்குச் செல்லவிருக்கும் ரணில், அங்கு தரிசனத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய உடனடியாகவே சனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்ட தமது செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவார். ஆக, மற்றொருவருக்கு விட்டுக்கொடுக்கும் நிலையில் ரணில் இல்லை.

மொட்டு அணி எப்படியும் சிங்கள வாக்குகளை நம்பித்தான் தமது வேட்பாளரைக் களத்தில் இறக்கும். அந்த வாக்குகளை அவர்களால் பெருமளவுக்கு அறுவடை செய்யக் கூடியதாக இருக்கும் என்பதும் உண்மை. அதனால், சிறுபான்மையினருடைய வாக்குகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒருவரை களத்தில் இறக்க வேண்டும் என்ற கருத்து ஐ.தே.க.வில் உள்ளது. இந்தத் தேர்தலிலும் கோட்டைவிட்டுவிட்டால், மொட்டுவில் களம் இறங்குபவர்— அவர் கோத்தாவாக இருந்தாலும் மற்றொருவராக இருந்தாலும், அடுத்து வரும் இரண்டு பதவிக் காலத்துக்கு இருந்துவிடலாம் என்பதால், இம்முறை எப்படியும் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பில் ஐ.தே.க. உள்ளது. அதனால், ஐ.தே.க.வின் வேட்பாளர் யார் என்ற கேள்வி கொழும்பு அரசியலில் பலமாக உள்ளது.

09 ஆம் பக்க தொடர்ச்சி →

விளைவித்தால் தற்போதைய உயிர்த்த ஞாயிறின் பின்னைய காலகட்டத்தில் உடனே சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்ற ரீதியில் இவர்களுடைய திடீர் பௌத்தமயமாக்கல் நிகழ்வுகள் நடைபெறுகின்றனவோ நானறியேன்.

ஆகவே, எமது கண்முன்னே எமது உணர்வுகள், எதிர்ப்புக்கள் எதனையும் கண்டுகொள்ளாமல், பொருட்படுத்தாமல் நம் முன் நடைபெறும் இந்த அநீதிகளை நாம் இனியும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. யுத்தத்துக்கு பின்னரான தமிழ் மக்களின் அரசியல் ஒரு திருப்புமுனையை அடைந்திருக்கிறது. சகல தமிழ் கட்சிகளும் எமது இனத்தின் எதிர்கால இருப்பு பெரும் ஆபத்தில் இருக்கின்றது என்பதை உணர்ந்து தமக்கு இடையிலான காழ்ப்புணர்வுகள் அரசியல் போட்டிகளை மறந்து ஒன்றுபட்டு முழுமையான 'அரச எதிர்ப்பு' அரசியலை மேற்கொள்ள ஆயத்தமாக வேண்டும்.

மிகவும் நரித்தனமாகவும் கபடத்தனமாகவும் எமக்கு எதிராக ஒரு பெரும் கட்டமைப்பு ரீதியானதும் கலாசார ரீதியானதுமான இனப் படுகொலையை இந்த அரசாங்கம் முடுக்கி விட்டுள்ளமையை தமிழ் தேசிய கூட்டமைப்பு இனிமேலாவது ஏற்றுக்கொண்டு அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும் துரோகச் செயலை நிறுத்த வேண்டும்.

எமது மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் சில கண்துடைப்பு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு அரசாங்கத்திடம் இருந்து நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக எமக்கு எதிரான இந்த ',இன அழிப்பு' நடவடிக்கைகளை கண்டும் காணாததுபோல தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்படுவதை இனியாவது நிறுத்த வேண்டும். முழுமையான 'அரச எதிர்ப்பு' அரசியலே எம் முன்னே இருக்கும் ஒரே வழி. தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு சர்வதேச சமூகம் மற்றும் இந்தியா ஆகியவற்றின் உதவியுடன் எமக்கு எதிரான இனப்படுகொலை செயற்பாடுகளை நிறுத்துவதற்கும் இணைந்த வடக்கு கிழக்கில் சுய நிர்ணய அடிப்படையில் நிரந்தரமான தீர்வு ஒன்றை கொண்டுவருவதற்கும் உபாயங்கள், வழி வகைகளை ஆய்ந்தறிந்து மேற்கொள்ளவேண்டும். இன்று கன்னியாவில் மக்கள் பெரும் அளவில் ஒன்று சேர்ந்து நடத்தும் நடவடிக்கைகள் வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

## கூட்டமைப்பு சரியான பாதையில் பயணிக்க வேண்டும் : அனந்தி



கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சரியான பாதையில் பயணிக்க வேண்டும் என ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் அனந்தி சசிதரன் தெரிவித்தார். கல்முனையில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "நாங்கள் கூட்டமைப்பை சிதைப்பதற்காக கிழக்கில் களமிறங்கவில்லை. கூட்டமைப்பு சரியான பாதையில் பயணிக்க வேண்டும் என்பதற்கான அழுத்தத்தை கொடுப்பதற்காகவே கிழக்கிற்கு விஜயம் செய்கின்றோமே தவிர வாக்குகளை சிதைப்பதற்காகவல்ல. வடக்கிலே ஸ்திரமான நிலையில் எமது கட்சி காலூன்றாத நிலையில் கிழக்கில் அரசியல் செய்வது நமது நோக்கமல்ல.

கூட்டமைப்பின் தலைமை உள்ள கிழக்கு மாகாணத்தில் பல இடங்கள் பறிபோயுள்ளன. இதன் நிமித்தமே நாங்கள் வடக்கு கிழக்கு என்று பாராமல் தமிழர்கள் என்ற நோக்கிலே குரல் கொடுப்பதற்காக வருகின்றோம். கிழக்கில் உள்ள மக்கள் தங்களுக்கான சரியான தலைமைகளை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்" என மேலும் தெரிவித்தார்.

05 ஆம் பக்க தொடர்ச்சி →

என்பதற்கு சிறந்த உதாரணமாக கன்னியா காணப்படுகின்றது. இதனைக் கவனத்தில் கொண்டு நாம் இலங்கையில் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறையிட்டுள்ளோம். அது மட்டுமன்றி வெளிநாட்டு உயர் ஸ்தானிகர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறோம். இதனைவிடவும் நாம் பல தரப்பினருடனும் கலந்துரையாடி எடுத்துரைத்துள்ளோம். இந்த விடயம் குறுகிய மற்றும் நீண்டகாலத்தில் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் பற்றியும் பல தளங்களில் வெளிப்படுத்தியுள்ளோம்.

ஆனால் நடந்தேறியது ஒன்றுமே—யில்லை. நாங்கள் சிங்கள மக்களுக்கோ பௌத்தத்துக்கோ எதிரானவர்கள் அல்லர். ஆனால் எமக்கு எதிரான ஆக்கிர மிப்புக்களும் அடாவடித்தனங்களும் எங்களை கதிகலங்க வைக்கிறது. இது ஒரு முடிவுக்கு கொண்டு வரப்படாத பட்சத்தில் நல்லிணக்கம் புரிந்துணர்வு சமய பாதுகாப்பு என்பது வராமலே போய்விடும்.

**கேள்வி:திருமலையில் தமிழர்களின் பூர்விகங்கள் முற்றாக பறிபோகும் ஆபத்துள்ளதாக கூறப் படுகின்றதே?**

பதில்:— ஆம், எங்கள் அரசியல் தலைமை களின் கையாலாகத்தன்மையின் காரணமாகவே படிப்படியாக பூர்வீக இடங்களையும் வரலாற்றுப் பெருமை கொண்ட இடங்களையும் இழந்து கொண்டிருக்கிறோம். ஏலவே திருகோண மலை மாவட்டத்தில் பல்வேறு இடங்கள் பறிபோய் விட்டன. இன்னும் பல கேந்திர இடங்கள் பறிக்கப்படும் நிலையிலேயே காணப்படுகிறன. தென்னவன்மரவடி, இங்குள்ள கந்தசாமி மலை, பிள்ளையார் ஆலயம் என ஆக்கிரமிப்பு பட்டியல் நீடிக்கின்றது. கன்னியா மலை அடிவாரத்தில் பௌத்த மடமொன்று நிர்மாணிக்கப்பட்டு விகாரை கட்டுவதற்கரிய கைங்கரியங்கள் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிங்கள பௌத்த அரசானது தமிழர் வரலாற்றை மஹாவம்ச வரலாறாக திரிபு படுத்த முயற்சிக்கின்றது. வரலாற்றை திரிபு படுத்துவது மாற்றுவது என்பதை அரசும் தொல் பொருள் திணைக்களமும் வடகிழக்கிலுள்ள பல திணைக்களங்களின் ஊடாக தனது திட்ட மிடல்களை முன்னெடுக்கின்றது.

வட கிழக்கு எங்கும் மிகப்பாரிய அளவில் சிங்கள பௌத்த மயமாக்கல் தாராளமாக இடம் பெறுகிறது. குறிப்பாக 2009 முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் பௌத்த மயமாக்கல் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது. தமிழர் பிரதேசத்தை முழுமையாக பௌத்த பூமியாக மாற்றும் உள்நோக்குடனேயே அனைத்தும் திட்டமிடப்படுகின்றனவா என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் இன்று பெரும் கவலையாக எழுகின்றது இந்த விவகாரம் தொடர்பில் தமிழ் தலைமைகளோ அல்லது சிவில் அமைப்புக்களோ அதிக கவனம் செலுத்தவில்லை என்பதை நினைக்க மிகவும் வேதனையளிக்கிறது. இன்று கன்னியாபிள்ளையார் ஆலயம். நாளை கோணேஸ்வரர் ஆலயமாக மாறும் நிலை உருவாகினாலும் ஆச்சிரியப்படுவதற்கில்லை. அப்போதும் நாம் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்போகின்றோம் ஐ.நா மனித உரிமை சாசனத்தில் ஒரு மனிதனின் வழிப்பாட்டு சுதந்திரம் தொடர்பான உரிமைகள் வலியறுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப எமது பண்பாட்டு அடையாள உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் சனநாயக வழியில் ஒன்றிணைந்து குரல்கொடுக்க முன்வெரவேண்டும்.

02 ஆம் பக்க தொடர்ச்சி →

காலத்திற்கு காலம் சிங்கள குடியேற்றத்திட்டங்கள் நடைபெற்று வந்திருக்கின்றது.

அந்த வகையிலேயே மிகக் குறிப்பாக 1947 ஆம் ஆண்டு அப்போதைய பிரித்தானிய அரசாங்கத்தினுடைய விவசாய அமைச்சரராக இருந்திருக்க கூடிய டி.எஸ் செனநாயக்க அவர்கள் 1947ம் ஆண்டிலேயே 12 விவசாய குடியேற்றங்கள் என்ற பேரிலே 12 குடியேற்றங்களை உலர் வலயத்திலே மேற்கொள்கின்றார். இந்த 12 குடியேற்ற திட்டங்களுக்காகவும் கிட்டத்தட்ட 30 மில்லியன் ரூபாவை அவர் அக்காலத்திலேயே செலவளிக்கின்றார். ஒரு குடும்பத்திற்கு கிட்டத்தட்ட அவ்வளவாக செலவளிக்கப்படுகிறது என்று பார்த்தால் 10000 ரூபாவை 1947ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு குடும்பத்திற்கு செலவளிக்கப்படுகின்றது என்று பார்த்தால், அந்த விவசாய அபிவிருத்திக்கு என்பதற்கு அப்பால் அவர்களுக்கு நிச்சயமாக மறைமுக நிகழ்ச்சி நிரல் இருந்திருக்கிறது என்பது மிகவும் தெளிவாக தெரிகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை சுதந்திரம் அடைந்ததற்கு பிற்பாடு அதே டி.எஸ் செனநாயக்க இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்ற கையோடு குறிப்பாக கிழக்கு மாகாணத்திலே பரவலாக சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்கின்றார். கல்லோயா திட்டத்தினூடாக அதனுடைய மிக வெளிப்படையான நோக்கம் உலர் வலயத்திற்கு நீர் பாய்ச்சுவதாக இருந்தாலும் அதன் மறைமுக நோக்கம் தமிழர் தாயகப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்வதாக இருந்திருக்கின்றது. அதற்கு சாட்சி சொல்வது போலவே 1949 ஆம் ஆண்டு பதவியா பிரதேசத்திலேயே ஒரு சிங்கள குடியேற்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் டி.எஸ் சேனநாயக்க பேசுகின்றார்.

அந்த மக்கள் முன்னிலையிலேயே கூறுகின்றார் இன்று உங்களுடைய சொந்த கிராமத்தில் இருந்து வெளியேறி இந்த புதிய கிராமத்திலேயே குடிபுகுகின்ற நீங்கள் இந்த தேசத்திலே வரலாற்றிலேயே பேசப்படுவீர்கள் கடலில் அடித்துச் செல்லப்படுகின்ற மரக்குச்சிகள் கரையொதுங்கி காப்பரணாக இருப்பது போல சிங்கள மக்களுக்கு காப்பரணாக நீங்கள் இருப்பீர்கள் சிங்களவர்களுக்கான இறுதியுத்தம் இந்த பதவியாவிலே தான் தொடக்கப்படும். எதிர்காலத்திலே இந்த நாட்டை துண்டாட நினைப்பவர்களுக்கு பதவியாவிலே இருக்கக்கூடிய சிங்கள மக்களாகிய நீங்கள் நல்ல செய்திகளைச் சொல்லுவீர்கள் என்று தீர்க்கதரிசணத்தோடு அக்காலப் பகுதியிலேயே கூறியிருந்தார்.

# ஆப்கானிஸ்தானில் ஏவுகணை தாக்குதல் 24 தலிபான்கள் பலி

ஆப்கானிஸ்தானில் தலிபான்களை வேரடி மண்ணாக வீழ்த்துவதற்கு அந்த நாட்டு



ராணுவம் கங்கணம் கட்டிக்கொண்டு அதிரடி தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஒரு பக்கம் சமரச பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டு தலிபான்களும் நாசவேலைகளை தொடருகின்றனர். இந்த நிலையில் அங்கு உரூஸ்கான் மாகாணத்தில் காஸ் உரூஸ்கான் மாவட்டத்தின் குறிப்பிட்ட இடத்தில் தலிபான் போராட்டக்காரர்கள் பதுங்கி இருப்பதாக ராணுவத்துக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து நேற்று அந்த இடத்தை குறிவைத்து தலிபான் ராணுவம் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது. இந்த தாக்குதலால் அந்தப் பகுதியே குலுங்கியது.

24 தலிபான் போராட்டக்காரர்கள் கொன்று குவிக்கப்பட்டதுடன், அவர்களது இருப்பிடங்கள் தரை மட்டமாக்கப்பட்டன. அது மட்டுமல்ல, தலிபான் பயங்கரவாதிகள் குவித்து வைத்திருந்த ஆயுதங்கள், வெடிபொருட்கள் அத்தனையும் நாசமாக்கப்பட்டன. இந்த தாக்குதல்களால் அதிர்ந்து போன தலிபான் போராட்டக்காரர்கள் வாய் திறக்கவில்லை.

## பாரசீக வளைகுடா பதற்றத்தால் கச்சா எண்ணெய் விலை உயரும் அபாயம்


பாரசீக வளைகுடாவில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருவதால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது. அணு ஆயுத பரவலை தடுக்கும் விதமாக ஈரானுடன் ஆன அணுசக்தி ஒப்பந்தத்தில்



இருந்து அமெரிக்கா விலகியது. அது முதல் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே தொடர்ந்து மோதல் போக்கு இருந்து வருகிறது.

இந்த நிலையில் பாரசீக வளைகுடாவில் ஹார்முஸ் ஜலசந்தியில் அமெரிக்க போர்க் கப்பல் மற்றும் அதில் இருந்த இராணுவ வீரர்களை அச்சுறுத்தும் வகையில் பறந்த ஈரானின் ஆளில்லா விமானத்தை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. இதனால் பாரசீக வளைகுடா பகுதியில் போர் பதட்டம் நிலவுகிறது. சர்வதேச அளவில் வளைகுடா நாடுகளில் பெறப்படும் கச்சா எண்ணெயை ஏற்றிச் செல்லும் 20 சதவீத கப்பல்கள் பாரசீக வளைகுடா பகுதி வழியாக தான் செல்கின்றன. தற்போது இங்கு பதட்டம் நிலவுவதால் எண்ணெய் கப்பல்களை வர்த்தக நிறுவனங்கள் நிறுத்தி வைத்துள்ளன. இதன் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது

## சீனாவில் எரிவாயு நிலையத்தில் வெடி விபத்து: 10பேர் பலி



சீனாவில் எரிவாயு நிலையத்தில் நடந்த வெடி விபத்தில் 10 பேர் பலியாகினர். 5 பேர் மாயமாகினர். இதுகுறித்து சீனாவின் தேசிய ஊடகம் தரப்பில், “சீனாவில் ஹெனான் மாகாணத்தில் உள்ள இமா நகரத்திலுள்ள எரிவாயு நிலையத்தில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 10 பேர் பலியாகினர். 5 பேர் மாயமாகினர். அவர்களைத் தேடும்பணி நடந்து வருகிறது. 19 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்” என்று செய்தி வெளியிட்டுள்ளது.

விபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து காவல்துறையினர் விசாரணை மேற் கொண்டுள்ளனர். இந்த விபத்து காரணமாக ஏற்பட்ட அதிர்வுகள் 3 கிலோ மீற்றர் தொலைவிலிருந்த வீடுகளில் உணர்ந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

## பாகிஸ்தான் தலைமை மருத்துவமனையில் தற்கொலைப்படை தாக்குதல் : 3 பேர் பலி

பாகிஸ்தான் நாட்டின் தலைமை மருத்துவமனையில் இன்று தற்கொலைப்படை பயங்கரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 3 பேர் பரிதாபமாக பலியாகினர்.

பாகிஸ்தான் நாட்டில் உள்ளது தேரா இஸ்மாயில் கான் தலைமை மருத்துவமனை. இந்த மருத்துவமனையில் இன்று தற்கொலைப்படை பயங்கரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 3 பேர் பரிதாபமாக பலியானார்கள். மேலும், 8 பேர் படுகாயம் அடைந்தனர். தகவலறிந்து காவல்துறையினர் அங்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்களை மீட்டு முதலுதவி சிகிச்சை அளித்து வருகின்றனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



## சிசிலியில் வெடித்து சிதறிய எரிமலை... விமான நிலையங்கள் மூடல்

இத்தாலி நாட்டிலுள்ள சிசிலி தீவில் உள்ள எரிமலை வெடித்து சிதறியதில் அருகிலுள்ள



நிலப்பரப்புகள் முழுவதும் கரும்புகை சூழ்ந்து காணப்பட்டது. ஐரோப்பாவின் மிகப்பெரிய எரிமலையான இத்தாலியின் மவுண்ட் எட்னா வெடித்து தீப் பிழம்புகளை கக்கியது. சிசிலி தீவில் உள்ள எட்னா எரிமலை வெடித்து சிதறியதால் வெளிவந்த நெருப்பு குழம்பு, அருகிலுள்ள அனைத்து இடங்களுக்கும் பரவியது. இதனால் சிசிலியின் இரண்டாவது பெரிய நகரமான கட்டானியாவில் இரண்டு விமான நிலையங்களை மூடுவதற்கு மவுண்ட் எட்னா எரிமலை வெடிப்பு காரணமாக அமைந்தது எரிமலை அமைந்துள்ள பகுதியில் ஏற்பட்ட மிதமான நிலநடுக்கமே உறங்கிக் கொண்டிருந்த எட்னா எரிமலை லாவாவை கக்க காரணம் என்பது தெரியவந்துள்ளது.

எரிமலை வெடிப்பு காரணமாக சிசிலி வான்வழிப் பாதையில் விமானங்கள் பறக்க அனுமதிக்கப்படவில்லை. நள்ளிரவு வெடிக்க துவங்கிய எரிமலையால் அருகிலிருந்து கடானியா மற்றும் காமிசோ விமான நிலையங்களை புகைமண்டலம் சூழ்ந்தது. சாம்பலும் கரும்புகையும் பரவியதால் மேற்கண்ட விமான நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டன . எரிமலை வெடிப்பு காரணமாக காமிசோ விமானநிலையத்தில் விமான போக்கு வரத்து முற்றிலுமாக தடை செய்யப் பட்டது.

சுமார் 3,300 மீட்டர் உயரமுடைய எட்னா எரிமலை வெடித்து சிதறும் சம்பவம், அடிக்கடி நிகழ்ந்தாலும் இதுவரை குறைவான சேதத்தையே ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. எனினும் எரிமலைக்கு அருகில் வசித்து வரும் மக்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். அங்கு பேரிடர் மீட்புக் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு உள்ளனர்.

தற்போது எரிமலை வெடித்து சிதறியதால் ஏற்பட்ட நெருப்பு குழம்பானது சுமார் 1.5 கிமீ தொலைவு பயணித்து, எரிமலையின் தென்கிழக்கு முகத்தில் அமைந்துள்ள ஆக்ஸ் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படும் பகுதியில் சேர்வதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காதுகளை கவனித்து கவனமாகப் பேசுங்கள்

குழந்தைகள் முதல் தாத்தாக்கள் வரை இப்போது கைபேசியுடன்தான் பொழுதைப் போக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் ஒருபுறம் இருந்தாலும், விளையும் கெடுதல்களே பலவிதங்களில் விஸ்வரூபம் எடுத்தபடி உள்ளன.

அதிக அளவில் செல்போனை பயன் படுத்துகிறவர்களின் உடல்நலமும், மன நலமும் பாதிக்கப்படுகிறது. அதுபற்றி பல்வேறு விதமான ஆய்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இது தொடர்பான முக்கியமான ஆய்வு ஒன்றில், செல்போனை அதிகம் பயன்படுத்து கிறவர்களின் காதுகேட்கும் திறன் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்திருக்கிறது. ஆய்வில் ஈடுபட்ட காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள் 18 முதல் 40 வயதுக்குட்பட்டவர்களின் காதுகேட்கும் திறனை ஆய்வுசெய்தனர். ஆய்வுக் குட்பட்டவர்களில் 71 சதவீதம் பேர் இளைஞர்கள். அவர்களில் பெண்களும் அடக்கம். ஆய்விற்கு உட்படுத்தப்பட்டவர்களில் 52 சதவீதத்தினர் கைபேசியில் அளவுக்கு அதிகமாகப் பேசி, தங்கள் காது கேட்கும் திறனை ஓரளவு இழந்திருந்தது கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. செல்போனில் பேசுபவர்கள் மட்டுமின்றி, அதை பயன்படுத்தி காது கருவிகளை மாட்டிக்கொண்டு அதிகநேரம் பாட்டுகேட்பவர்களுக்கும் காதுகேட்கும் திறன் குறையும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

**முக்கியமான ஆய்வு ஒன்றில், கைபேசியை அதிகம் பயன்படுத்துகிறவர்களின் காதுகேட்கும் திறன் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்திருக்கிறது. ஆய்வில் ஈடுபட்ட காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள் 18 முதல் 40 வயதுக்குட்பட்டவர்களின் காதுகேட்கும் திறனை ஆய்வுசெய்தனர். ஆய்வுக்குட்பட்டவர்களில் 71 சதவீதம் பேர் இளைஞர்கள். அவர்களில் பெண்களும் அடக்கம்.**



இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வருடக்கணக்கில் செல்போனை பயன்படுத்தியவர்கள். வலது காதில் வைத்து பெரும்பாலும் பேசியதால், வலது காது வலியால் பாதிக்கப்பட்டிருக்கவும் செய்கிறார்கள் என்று அந்த மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஆய்வுக்கு உள்ளானவர்களில் 51 சதவீதத்தினர் இடது காதில்வைத்து கைபேசியைப் பயன்படுத்துகிறவர்கள். 40 சதவீதத்தினர் வலது காதில்வைத்து பேசியவர்கள். மீதி 9 சதவீதத் தினர் இரண்டு காதுகளிலும் மாறிமாறி வைத்து பேசியவர்கள். இவர்களில் பெரும்பகுதியினர் காது வலியாலும், காது அடைப்பினாலும், காது சரியாகக் கேட்காமலும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர் களில் சிலர் காதில் வித்தியாசமான சத்தம் கேட்பதாகவும் தெரிவித்துள்ளனர்.



# ஒரேயொரு பறவைக்காக இசை நிகழ்ச்சிகள் ரத்து

கடந்த ஜூன் மூன்றாம் தேதி, பைப்பிங் ப்ளோவர் என்ற பறவை அந்தக் கடற்கரைப் பகுதியில் கூடுகட்டி முட்டையிட்டிருப்பது தெரிய வந்திருக்கிறது. உடனே அந்தப் பறவைக்கு உரிய பாதுகாப்பை அளிக்கும்பொருட்டு, கோடைக்காலம் முடியும்வரை இசை நிகழ்ச்சிகள் அனைத்தையும் ரத்து செய்து நேஷனல் பார்க் சர்வீஸ் அமைப்பு அறிவிப்பு வெளியிட்டது.


`இயற்கை, அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது' என்ற கருத்தை வெளிப்படுத்தும் இந்தச் சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது. நியூஜெர்சி மாகாணத்தின் வடக்குப் பகுதியில் சான்டிஹூக்/கேட்வே நேஷனல் ரெக்கரேஷன் ஏரியா என்ற கடற்கரை, பொழுதுபோக்குக்கேற்ற தீவுப்பகுதி. இங்கு ஒவ்வொரு புதன்கிழமை இரவும் கோடைக்கால இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவது வழக்கம். இலவச அனுமதியுடன் நடைபெறும் அந்த நிகழ்ச்சியின்போது கடற்கரையில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். கடந்த ஜூன் 3—ம் திகதி, பைப்பிங் பிளோவர் என்ற பறவை அந்தக் கடற்கரைப் பகுதியில் கூடுகட்டி முட்டை—யிட்டிருப்பது தெரியவந்தது. உடனே அந்தப் பறவைக்குப் பாதுகாப்பை அளிக்கும்வகையில், கோடைக்காலம் முடியும் வரை இசை நிகழ்ச்சிகள் அனைத்தையும் ரத்துசெய்து நேஷனல் பார்க் சர்வீஸ் அமைப்பு அறிவிப்பு வெளியிட்டது. இது, அங்கு உள்ள இசை ரசிகர்களுக்கு ஏமாற்றமளித்தாலும், அந்தப் பறவையின் நலனுக்காக ஏற்றுக்கொண்டனர்.

*அந்தப் பறவையிடம் அப்படியென்ன விசேஷம்?*

பைப்பிங் பிளோவர் என்பது, அட்லான்டிக் கடலில் நியூஜெர்சி கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே அரிதாகக் காணப்படும் பறவையினம். இதில் 3,000 ஜோடிகள் மட்டுமே தற்போது உயிர்வாழ்கின்றன. எனவே, அவை முட்டையிட்டு அடைக்காக்கும் பருவங்களில் மனிதர்களால் இவற்றுக்கு எந்தத் தொந்தரவும் எழாத வகையில், அவை வசிக்கும் பகுதிகளைச் சுற்றி சுமார் 1,000 மீட்டர் தூரத்துக்கு பொதுமக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. குஞ்சு பொரிக்க ஒரு மாதம், வளர ஒரு மாதம் என இரண்டு மாதகாலமும் அவற்றுக்கு பாதுகாப்பான சூழல் தேவை. அங்குள்ள சுற்றுச்சூழல் அமைப்புகளும் ஆர்வலர்களும் அதிக அக்கறையுடன் அதைக் கவனித்துவருகிறார்கள். இந்தப் பறவை—யினத்தைப் பாதுகாக்கும்பொருட்டு, சான்டிஹூக் கடற்கரைப் பகுதியில் மது அருந்த ஏற்கனவே தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, பறவை ஆர்வலரும் ஆய்வாளருமான அமிர்தராஜிடம் கேட்டபோது, ``பறவைகள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில், மேற்கத்திய நாடுகள் மிகுந்த ஆர்வம்காட்டுகின்றன. இந்த பைப்பிங் பிளோவர், அழிவின் விளிம்பிலுள்ள பறவையினம். அமெரிக்காவின் மத்தியப் பகுதியில் வசிக்கக்கூடிய இது, முட்டையிடும் காலத்தில் மட்டும் கடற்கரைப் பகுதிக்கு வரும். கடற்கரை மணலில், கூழாங்கற்கள் நிறைந்த பகுதியில் குறைந்தபட்சம் நான்கு முட்டைகள் வரை இடும். பெரும்பாலும் ஏப்ரல் முதல் ஜூன் மாதங்களுக்குள் முட்டையிட்டு குஞ்சு பொரித்து, வளர்ந்தவுடன் வேறு இடம் நோக்கிப் பறந்துவிடும். ஆனால் இந்த ஆண்டு, ஒரேயொரு பறவை மட்டும் சற்று தாமதமாக முட்டையிட்டு அடைகாக்கத் தொடங்கி—யிருக்கிறது. பைப்பிங் பிளோவர் பறவைக்காக, இசை நிகழ்ச்சிகளை ரத்துசெய்துள்ளார்கள்.

இதேபோல டெக்ஸாஸிலும் மூன்று மாதங்களுக்கு முன்னர் பார்க்கிங் ஏரியாவில் முட்டை பொரித்திருக்கிறது. உடனே அங்கு வேறு யாரும் நுழையாதபடி ஒரு மாத காலத்துக்கு தடைவிதிக்கப்பட்டது. இப்படி ஒரு பறவை—யினத்தைப் பாதுகாப்பதற்காக அமெரிக்க அரசாங்கமே நடவடிக்கை எடுப்பதைப் பார்க்க முடிகிறது.

# கண்ணீர் விட்டு அழுவதால் ஏற்படும் நன்மைகள்



நாம் பிறக்கும் போதே அழுதுகொண்டுதான் பிறப்போம்.. தாயின் கருவறையில் இருந்து வெளியேறி வந்ததும் நாம் கேட்கும் முதல் சத்தம் தாயின் வலிக்கான கண்ணீரும், நமது அழுகையின் குரலும்தான். பொதுவாக அழுகை என்பது உணர்ச்சியின் வெளிப்பாடு என்று இருந்து வருகிறது. இந்த உலகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் முதலில் செய்யும் ஒரு விடயம் என்னவென்றால் அது அழுகைதான். இந்த அழுகைக்கும் உடல் நலத்திற்கும் இணைப்பு உள்ளதாகவும், இதற்கு மருத்துவ முறையில் நல்ல தீர்வு உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. கண்டிப்பாக வாரத்திற்கு மூன்று நாட்கள் கட்டாயம் அழவேண்டும் என்று ஜப்பானிய மருத்துவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். ஜப்பான் நாட்டை பொறுத்த வரையில் ஆண்கள் மற்றும் பெண்கள் நாளொன்றுக்கு சுமார் 20 விழுக்காடு அளவிலான பணியாற்றும் மக்கள் கூடுதல் பணி செய்கின்றனர். இதன் காரணமாக அவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகியும் வருகின்றனர். இதனால் ஏற்படும் மன அழுத்தத்தை சரி செய்ய, மருத்துவரிடம் செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறது. இதற்கான சரியான சிகிச்சையாக அழுகையை பரிந்துரை செய்து வருகின்றனர்.